www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1-15 டிசம்பர் '88

4-2

விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



# கக்கியதை நக்கும் திருவாளர் பரிசுத்தம்!


## போபார்ஸ்:

அண்டப்புளுகுக்கு ஆப்பறையும் ஆதாரங்கள்!

படிப்பகம்

www.padippakam.com

# டி.வி.எஸ். அயோக்கியத்தனத்துக்கு அரசே அங்கீகாரம்!




ஓட்டுநர் செல்வமணி

டி.வி.எஸ் சங்கிலித் தொடர் நிறுவனத்தின்கீழ் இயங்கி வரும் சதர்ன் ரோடுவேஸ் சரக்கு போக்குவரத்துநிறுவனத்தின்லாப வெறிக்கு தொழிலாளர்கள் பலியாகும் பல சம்பவங்களை தக்கஆதாரங்களுடன் ஏற்கனவே பலமுறை புதிய ஜனநாயகம்அம்பலப்படுத்தியிருக்கிறது. அம்பலப்பட்ட நிர்வாகம் புதிய ஜனநாயகம் மற்றும் அதன் வாசகர்கள்மீது மூர்க்கமாக பாய்ந்து மூக்குடைபட்டுசென்றது, வாசகர்கள் அறிந்ததே!

சட்டபூர்வமாகவே தொழிலாளர்களை கொத்தடிமைகளாக நடத்த டி.வி.எஸ் நிறுவனத்திற்கு அரசின் தொழிலுறவு சட்டங்களும் அதன் நிறுவனங்களும் எப்படி விசுவாச சேவை செய்கின்றன என்பதை இங்கு விளக்குகிறார், திருச்சியைச் சேர்ந்த தொழிலாளி செல்வமணி. இவர் ஏறக்குறைய3 ஆண்டு காலம் அந்நிறுவனத்தில் பணிபுரிந்த பிறகு அந்நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்.

வாசகர்களே!

எனது பெயர் எஸ். செல்வமணி. வ.உ.சி மாவட்டத்தில் விளாத்தி குளம் எனது சொந்த ஊர். கூட்டுக் குடும்பத்தில் ஓரளவு வசதியாகவே வாழ்ந்து வந்த எனக்கு 11.1.85ல் சதர்ன் ரோடுவேஸ் திருச்சி பிரிவில் ஓட்டுநர் வேலை கிடைத்தது. தற்காலிக வேலை உத்திரவின் கீழ் மூன்று ஆறு மாதங்களும், சோதனைக் கால வேலை உத்திரவின் கீழ் இரண்டு ஆறுமாத காலமும் ஆக தொடர்ந்துஏறக்குறைய 3ஆண்டு காலம் பணிபுரிந்து கொண்டிருந்த நேரத்தல் 28.9.87 அன்று எந்த ஒரு காரணமும் இன்றி பணிநீக்க உத்திரவின் மூலம்என்னைவேலையிலிருந்து வெளியேற்றியது நிர்வாகம்.

திருச்சி கிளையில் மட்டும் என்னைப் போல் 6 தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். என்னுடன் சேர்த்து மொத்தம் நான்கு தொழிலாளர்கள் மட்டுமே நிர்வாகத்திற்கு எதிராக தொழிலாளர் நலத்துறை, திருச்சி அலுவலகத்தில் வழக்கு பதிவு செய்தோம். பிறகுதான் தெரிந்தது அது முதலாளிகளின் நலத்துறை அலுவலகம் என்று.

ஏறக்குறைய ஓராண்டுகாலம் எங்களை இழுக்கடித்த தொழிலாளர்நலத்துறை, கடைசியில் அவித்தனமான அறிக்கையைஎங்கள்கைகளில் திணித்து வழக்கை மூட்டை கட்டிவிட்டது. "இருதரப்பினரையும் அழைத்து பல சுற்று பேச்சு வார்த்தைகளும், சமரச பேச்சு வார்த்தைகளும் மேற்கொண்டேன். நிர்வாகத்தின் தரப்பில், அதன் மேலாளர் திரு ஆர். சம்பத்குமார் மற்றும் கிளை அலுவலக பொறுப்பாளர் திரு. வெங்கட்ராகவனும் (இவர்கள் சார்பில் நிர்வாகத்தின் வக்கீல் மட்டுமே பேச்சு வார்த்தைக்கு வந்திருந்தார்) மனுதாரர் தரப்பில் மனுதாரரும் தத்தம் நிலையை தொடர்ந்து வலியுறுத்தியதால், இவ்விஷயத்தில் ஒரு சுமூகமான முடிவுக்கு வர இயலாத சூழ்நிலையில் 1947ம் வருட தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12(4)ன்கீழ் எனது சமரச முறிவு அறிக்கையினை பணிந்தனுப்புகிறேன" என்று எங்களுக்கு ஒருநகலும், தொழிலாளர் துறை ஆணையர் மற்றும் அரசு செயலாளர், சென்னை-9க்கு மற்றொரு நகலும் அனுப்பிவிட்டு ஒதுங்கி கொண்டது.

அதே நகலில், கீழ்கண்டவாறு முதலாளியின் வாதத்தையும் வெட்கமில்லாமல் அச்சடித்துக் கொடுத்தது. "தகுதிகாண் பருவத்தினருக்கு தொடர்ந்து வேலை கோரும் உரிமை கிடையாது என்றும், மனுதாரர் எந்த நஷ்டஈடும் பெற தகுதியற்றவர் என்றும், அவரது (தொழிலாளரது) கோரிக்கை சட்டத்திற்கு எதிரானது என்றும், நிர்வாகம் தெரிவித்துள்ளது" இந்த கொடுமையை எங்குசொல்லி முட்டிக் கொள்வது?

தகுதிகாண் பருவத்தின் கால வரம்பு 6 மாதத்திற்கு உட்பட்டது. மூன்றாண்டு காலம். ஏறக்குறைய 6முறை. நிர்வாகம் ஏன் என்னை தகுதிகாண் பருவத்திலேயேவைத்திருந்தது இது சட்டபூர்வ மோசடி அல்லவா? லாரி என்ன புராணங்களில் வரும் தேவர்கள் வைத்திருக்கும் விமானமா? இத்தொழிலை கற்றுக் கொள்வதற்கு உண்மையிலேயே மூன்றாண்டு காலம் தேவையா? ஆம்! என்றால் அரசு எனக்கு வழங்கிய ஓட்டுநர் சான்றிதழ் நடைவண்டி ஓட்டுவதற்கா?

அனைத்திற்கும் மேலாக, தகுதிகாண் பருவத்தில் இருக்கும் என்னிடம் 3 ஆண்டு காலமும் நிர்வாகம் எப்படி தனிப்பட்ட முறையில் சரக்கு லாரி ஓட்டும் பொறுப்பை கொடுத்தது? இது, பொது மக்களின் உடமைக்கும் உயிருக்கும் அறிந்தே ஆபத்து ஏற்படுத்தும் செயலல்லவா? இதற்காக நிர்வாகத்திற்கு எந்த ஒரு தண்டனையும் கிடையாதா? இப்படி ஆயிரத்தெட்டு கேள்விகள் சாதாரணஎன் அறிவுக்கே எட்டும்போது, அனைத்தும் அறிந்த அதிகார வர்க்கத்திற்கு ஏன் எதுவும் எட்டவில்லை என்பது புரியவில்லை.

இதிலிருந்து ஒரு எளிய உண்மை விளங்கவில்லையா? எதற்கும் உதவாத அதிகார வர்க்கத்தை இனியும் நம்பிக் கொண்டிருப்பதில் பயனேதும் இல்லை. எதற்கெடுத்தாலும் இந்த அதிகார வர்க்க கூட்டத்திடம் மடிபிச்சை கேட்பதை விட்டொழித்து நமது துயரங்களுக்கு காரணமானவர்களை நாமே நேரிடையே தண்டிக்க வேண்டும். இதற்கு தடையாக இருக்கும் அதிகாரவர்க்க ஒட்டுண்ணிகூட்டத்தை. இவர்களுக்கு 'லாலி' பாடும் ஒட்டுப் பொறுக்கிகளையும் சேர்த்து ஒழிக்க வேண்டும்! ■



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

நான்காமாண்டு

2

1—15 டிசம்பர் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ 1.50
ஆண்டு சந்தா : ரூ. 36

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)
ஆண்டு சந்தா : ரூ 170

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# அரசு பயங்கரவாதத்தின் உச்சகட்டம்!

**ப**ஞ்சாபில் ரகசிய கொலைப்படையைக் கட்டியமைத்து அடுத்தடுத்து அட்டூழியங்களை அரங்கேற்றி நியாயப்படுத்தி வந்த பாசிச ராஜீவ் கும்பல் இப்போது ஒரே நாளில் பல நூற்றுக்கணக்கான அப்பாவி சீக்கியமக்களைக் கொன்று குவித்துள்ளது. வெளியுலகுக்குத் தெரியாமல் நடந்த இந்தச் சதி இப்போதுதான் மெதுவாகக் கசிந்து வெளிவந்து சீக்கிய மக்களின் பச்சை ரத்தம் குடிக்கும் பாசிச கும்பலின் கோரமுகத்தை தோலுரித்துக் காட்டியுள்ளது.

பஞ்சாபின் எல்லைப்புற கிராமங்கள் தீவிர வாதிகளின் செல்வாக்கு மிக்க பகுதிகள். இரு மாதங்களுக்குமுன் பஞ்சாபில் பருவமழை கடுமையாகப் பெருகியபோது பக்ரா—நங்கல் அணை நிரம்பி வழிந்தது. அதே நேரத்தில் அரச பயங்கரவாதிகள், சீக்கிய தீவிரவாதிகளையும், அவர்களுக்குப் புகலிடம் தரும் எல்லைப்புற கிராம மக்களையும் பூண்டோடு ஒழிக்க ஒரு சதித் திட்டம் தீட்டினர். அதன்படி, கடந்த செப். 28 அன்று முன்னறிவிப்பின்றி திடீரென ஒரே நாளில் விதிகளை மீறி 1.84 லட்சம் கியூ செக் தண்ணீரைத் திறந்துவிட்டு அப்பகுதி முழுவதையும் வெள்ளத்தில் மூழ்கடித்தனர்

இதன் விளைவாக 26 5 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. 58,000 வீடுகள் இடிந்து விழுந்தன. 50,000 கால் நடைகள் வெள்ளத்தில் சிக்கி மாண்டன. பதினைந்து லட்சம் ஏக்கர்பரப்பளவுக்குப் பயிர்கள் நாசமாயின. எல்லாவற்றுக்கும் மேலாக 667 விவசாய மக்கள் வெள்ளத்தில் மூழ்கி மாண்டனர். இது அரசே தரும் புள்ளி விபரம். மீட்டெடுக்கப்பட்ட பிணங்களின் கணக்குதான் இது. ஆனால் பல நூற்றுக் கணக்கான பிணங்கள் வெள்ளத்தில் அடித்து வரப்பட்டதாக பாகிஸ்தான் நாளேடுகள் உறுதிப்படுத்துகின்றன.

வரலாற்றில் இது போன்ற அரக்கத்தனம் வேறெங்கும்நடந்ததில்லை. ஆனால் இச்சதியை அரங்கேற்றியவரும், பக்ரா—பியாஸ் நதி நீர்ப்பாசன வாரியத்தின் நிர்வாகத் தலைவருமான ராணுவ மேஜர் ஜெனரல் பி.என் குமார், அபாயக் குறிக்கும் மேலாக நீர்மட்டம் உயர்ந்ததால், அணையைக் காக்கும் பொருட்டு நீரைத் திறந்துவிட்டதாக நியாயப்படுத்தினார்.

இருந்தாலும், முன்னெச்சரிக்கை செய்ய வேண்டும் என்ற விதியை மீறி முன்னறிவிப்பின்றி ஒரே நாளில் 4 மடங்கு அதிகமான நீரைத் திறந்துவிட்டது மக்கள் விரோத கிரிமினல் குற்றம்! எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் கடந்த அக்டோபரில் பஞ்சாபுக்குப் போன பாசிச ராஜீவ், மேஜர் ஜெனரல் பி.என் குமாரின் அயோக்கியத் தனத்தை நியாயப்படுத்திவிட்டு மகிழ்ச்சியோடு திரும்பினார்.

ஆனால் வினை விதைத்தவர்கள் அதை அறுவடைசெய்துதானே ஆக வேண்டும்? பல நூற்றுக்கணக்கான சீக்கிய மக்களை வெள்ளத்தில்மூழ்கடித்துக் கொன்ற, அரச பயங்கரவாத சதிக்குத் தலைமையேற்ற மேஜர்ஜெனரல் பி.என் குமார், கடந்த நவம்பர் 7—ம் நாளன்று அவர் இல்லத்தருகே காரில் வரும்போது, சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அரசியல் தீர்வு காண்பதற்குப்பதில் அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதையே பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டுள்ளது பாசிசராஜீவ் கும்பல். அதிநவீன ஆயுதங்களுடன் சிறப்பு அதிரடிப்படையை ஏவியும், உளவுப்படை 'ரா'வைக் கொண்டும், கிரிமினல் குற்றவாளிகளைக் கொண்ட ரகசிய கொலைப்படையைக் "கட்டவிழ்த்துவிட்டும், கணக்கற்ற கருப்புச் சட்டங்களை ஏவியும், கொலைக்கு கொலையே பதில்" என்று வெறியூட்டி போலீசுடன் மோதல் என்ற பெயரில் அப்பாவி சீக்கியஇளைஞர்களை சுட்டுக்கொன்றும், கிராமப்புற மக்களை மிருகத்தனமான சித்திரவதை செய்தும் பயபீதியூட்டி அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது பாசிச கும்பல். சிவில் உரிமை அமைப்புகளும்சர்வதேச மனித உரிமைக் கமிஷனும் இதை அம்பலப்படுத்தி பகிரங்கமாக குற்றம் சாட்டியபோது அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. பதிலளிக்க வேண்டியஅவசியம் இல்லை என்று ஆணவத்தோடு மறுத்தது பாசிச கும்பல்.

ஆனால் பாசிச கும்பலின் பயங்கரவாத எத்தணிப்புகள் தொடர்ந்து தோல்வியைத் தழுவுவதோடு அம்பலப்பட்டும் வருகின்றன. அண்மையில் பஞ்சாபிலிருந்து மாற்றப்பட்டுள்ள சமன்லால் போன்ற உயர்போலீசுஅதிகாரிகளே பாசிசராஜீவ் கும்பல் ஏவிவிடும் அரச பயங்கரவாதத்தை நிறைவேற்ற மறுப்பதோடு எதிர்க்கவும் துணிந்துள்ளனர்.

அதே சமயம், கட்டவிழ்த்து விடப்படும் அரச பயங்கரவாதத்தின் விளைவாக சீக்கிய பயங்கரவாதம் ஒழிந்து விடவில்லை. மாறாக, முன்னிலும்தீவிரமாக பஞ்சாபிலும் அண்டை மாநிலங்களிலும் பரவுகிறது. அரசு பயங்கர வாதத்துக்கும் சீக்கிய மதவெறி பயங்கரவாதத்துக்கும் இடையில் சிக்கி மேலும் பல அப்பாவி சிவிலியன்கள் கொல்லப்படுகிறார்கள். நாட்டையும் மக்களையும் பேரழிவில் தள்ளிவிட்டு, சீக்கிய சமூகத்தையே கொன்றொழிக்கும் வெறியோடு அலையும் பாசிச ராஜீவ்கும்பலின் அரசு பயங்கரவாதத்துக்கும், சீக்கிய மதவெறி பயங்கரவாதத்துக்கும் எதிராக உழைக்கும் மக்கள் அணிதிரண்டு போராடி முறியடிக்க வேண்டிய தருணமிது! ●

படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவின் வாய்க்கொழுப்பும் வாக்குமூலங்களும்

போபார்ஸ் பீரங்கி ஊழல் மறுபடியும் வெடித்திருக்கிறது. இந்து பத்திரிக்கை வெளியிட்ட ஆவணங்கள், வி.பி. சிங் வெளியிட்ட ஸ்விஸ் வங்கிக் கணக்கு எண் ஆகியவை ராஜீவ் கும்பல் அமுக்க முயன்ற விவகாரத்தை மீண்டும் கிளப்பிவிட்டிருக்கின்றன. "போபர்ஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை ரத்து செய். 64 கோடி ரூபாயை அவர்களிடம் வசூல் செய்" என்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன.

"இந்தக் கேர்விகள் (கோரிக்கைகள்) நீண்ட நாட்களுக்குமுன்




னரே வந்துவிட்டன. சொல்லப் போனால் எனக்குள் நானே கேட்டுக் கொண்டேன். முதல் கேள்வி நம்மால் இதைச் செய்ய முடியுமா? இரண்டாவது கேள்வி—இவ்வாறு செய்வதன் மூலம் (ஒப்பந்தத்தை பாதியில் ரத்து செய்துவிட்டு 64 கோடியை போபார்ஸ் நிறுவனத்திடம் திரும்பக் கேட்பது) நமக்கு ஏற்படும் இழப்பு என்ன?"

"முதல் இழப்பு பாதுகாப்புத் துறையில். நாம் நமது பாதுகாப்பு தேவையை இழக்கப் போகிறோமா? இரண்டாவது, பணம். ஒப்பந்தத்தை ரத்து செய்வதன் மூலம் உண்மையில் நாம் நஷ்டமடையப் போகிறோமா? அல்லது 62 கோடிரூபாய் லாபமடையப் போகிறோமா? நாம் ஏதாவது நடவடிக்கை எடுத்தோமானால் ஏறத்தாழ 800 கோடி ரூபாய் இழக்க நேரிடும். ஒப்பந்தத்தின் ஷரத்துகள் எதையும் அவர்கள் மீறாதபோது தன்னிச்சையாக, ஒரு தலைப் பட்சமாக நாம் ஒப்பந்தத்தை ரத்து செய்வதால் அவர்களுக்கு இந்த இழப்பீட்டுத் தொகையை நாம் தர வேண்டி வரும்... அதனால் தான் நான் சொன்னேன்... 'ஒப்பந்தத்தை ரத்து செய்தால் ராஜீவ் காந்தியின் கவுரவம் உயரும்; ஆனால் தேசத்தின் பாதுகாப்பை விட்டுக் கொடுக்க வேண்டிவரும். மக்களின் வரிப்பணத்தில் ௦00 அல்லது 1000 கோடி ரூபாயை (நட்ட ஈட்டுத் தொகையாக) இழக்க வைத்து விட்டார் என்ற பழிக்கு ஆளாக நேரிடும். அதனால் அடியை நான் வாங்கிக் கொள்கிறேன். தேசம் வாங்க வேண்டாம்'"

சமீபத்தில் ஆங்கில வார ஏடு ஒன்றுக்கு அளிதத பேட்டியில் ராஜீவ் பேசியிருக்கும் உணர்ச்சி பொங்கும் வசனம் இது. 64 கோடி ரூபாயைத் திருடிப் பதுக்கி வைத்திருப்பவனின் பயம் கொஞ்சமாவது ராஜீவின் பேச்சில் தெரிகிறதா?

ஏப்ரல் 16, 1987 அன்று சந்தேகத்திற்கிடமற்ற தெளிவான வார்த்தைகளில் போபர்ஸ் ஊழலை அம்பலத்துக்குக் கொண்டு வந்தது ஸ்வீடன் ரேடியோ. "இந்தியாவின் உயர் மட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் முக்கியமான ராணுவ அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து ஸ்வீடனின் மிகப் பெரிய ஏற்றுமதி ஒப்பந்தத்தை போபார்ஸ் நிறுவனம் பெற்றிருக்கிறது" என்று அறிவித்தது.

ஏப்ரல் 17ம் தேதி இந்திய அரசு மறுப்பு அறிக்கை வெளியிட்டது. "இந்தச் செய்தி பொய்யானது, அடிப்படை இல்லாதது, விஷமத்தனமானது. இந்த வியாபார ஒப்பந்தம் தொடர்பாக யாருக்கும் எவ்விதத்திலும் பணம் தரப்படக்கூடாது என்று அரசு தெளிவு படுத்தியிருக்கிறது. வியாபார ஒப்பந்தங்களின் ரகசியமான முறைகேடான பணப்பட்டுவாடாக்களை எதிர்ப்பதுதான் அரசின் கொள்கை. இதை யார் மீறியிருந்தாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்."

19 மாதங்கள் கடந்து விட்டன. இத்தனை நாட்கள் என்ன நடந்தது? பொய்கள், மழுப்பல்கள், அதிகாரவர்க்கத்தின் வார்த்தை ஜாலங்கள் வாரியிறைக்கப்பட்டன. உண்மைகள் வெளிவராமல் தடுக்க அனைத்துமுயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதையெல்லாம் மீறி சிறிது சிறிதாக விவரங்கள் வெளிவரும்போதெல்லாம் அதற்குத் தகுந்தாற்போல் அறிக்கைகள் விடப்பட்டன. சாதாரணமாக பத்திரிக்கை வாசகர்கள் புரிந்து கொள்ள இயலாத அளவு விவரங்கள் சிக்கலாக்கப்பட்டன. இன்றைக்கு "என் பெயரில் எந்த வெளிநாட்டு வங்கியிலும் கணக்கில்லை" என்று ராஜீவும் "ராஜீவ்தான் கமிஷன் வாங்கினார் என்று நிரூபிக்க முடியுமா?" என்று காங்கிரஸ் எடுபிடிகளும் கேட்கும் நிலைமைக்கு கடைசிக் கட்டத்துக்கு— விவகாரம் வந்திருக்கிறது.

ஆனால் திருவாளர் பரிசுத்தத்தின் பொய்முகததைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், கடந்த 19 மாதங்களாக ராஜீவும் அவரது சகபாடிகளும் உதிர்த்த முத்துக்களை எடுததுக்கோர்த்துப் பார்க்க வேண்டும்.

"● நாங்கள் ஸ்வீடன் அரசிடமே கேட்டு விட்டோம். இந்த பேரத்தில் இடைத்தரகர்கள் கிடையாது;

● பணம் கொடுத்திருக்கக்கூடும். ஆனால் அது கமிஷன் அல்ல. பழைய இடைத்தரகரின் கணக்கை முடிக்கக் கொடுக்கப்பட்ட தொகை.

● நம்முடைய பேரத்துக்காக பணம் தரப்படவில்லை. வேறு வியாபார ஒப்பந்தங்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கலாம்.

● இந்தியர்கள் யாருக்கும் கமிஷன் தரவில்லையென்று போ



படிப்பகம்

www.padippakam.com

பர்ஸ் நிறுவனமே சொல்லிவிட்டது. வெளிநாட்டுக் காரர்களுக்குக் கொடுத்திருந்தால் அதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது.

● பாராளுமன்ற கூட்டுக்கமிட்டியே சொல்லிவிட்டது. இடைத்தரகர்கள், லஞ்சம் கமிஷன் எதுவும் கிடையாது.''

எல்லாம் முன்னுக்குப்பின் முரணான உளறல்கள். தேங்காய்த் திருடன் தென்னை மரத்தில்ஏறும்போது தோப்புச் சொந்தக்காரன் பார்த்து விட்டான். 'தென்னை மரத்தில் எதற்கு ஏறுகிறாய்?' என்று கேட்க ''புல் புடுங்க ஏறினேன்'' என்றுபதில் சொன்னான் திருடன். ''தென்னை மரத்தில் ஏதுடா புல்லு?'' என்றான் தோப்புககாரன் 'அதான் இறங்குறேன்' என்று பதில் சொன்னான் திருடன்

19 மாதமாக ராஜீவ்கும்பல் புளுகியதற்கெல்லாம் ஆப்பறைவது போல இந்து பத்திரிக்கை ஆதாரங்களுடன் கேள்வி எழுப்பியது.

''இந்திய அரசு போபார்ஸ் நிறுவனத்திடம் வாங்கிய ஆயுதத்துக்குத்தான் கமிஷன் தரப்பட்டது; இடைத் தரகரின் கணக்கை முடிப்பதற்காகத்தான் பணம் தரப்பட்டது என்று போபர்ஸ் நிறுவனம் கூறுவது பொய்''

''வின் சாத்தா 36 கோடி ரூபாய் போபர்ஸ் நிறுவனத்திடம் தனது ஸ்விஸ் வங்கிக் கணக்கில் பெற்றிருக்கிறார்.''

''இந்திய முதலாளி இந்துஜா நிறுவனத்தினர் 1979 முதல் போபர்ஸ் நிறுவனத்தின் ஏஜெண்டுகள்''

—என்று இந்து பத்திரிக்கை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது. இந்து பத்திரிக்கை வெளியிட்ட ஆவணங்களில் கண்டுள்ள விவரங்களும், தாங்கள் போபர்ஸ் நிறுவனத்திடம் கைப்பற்றிய ஆவணங்களும் முழுமையாக ஒத்துப் போகின்றன. அவை உண்மை தான் என்று ஸ்வீடன் அரசின் பிராசிக்யூடர் ஜெனரல் உறுதி செய்தார்.


இதற்கெல்லாம் ராஜீவின் பதில் என்ன? ஏதாவது குறுக்குச் சந்தில் பாய்ந்து தப்பிக்கலாம் என்றால் இனி முடியாது. விவகாரம் முட்டுச் சந்துக்கு வந்து விட்டது. இருந்தும் ராஜீவ் நம்பிக்கை இழக்கவில்லை.

''வின் சத்தா மீது வழக்கு தொடர போதிய ஆதாரங்கள் இல்லை. இந்துஜா விவகாரத்தில் 'இந்து' பத்திரிக்கை வெளியிட்டுள்ள ஆவணங்களில் சில குறைபாடுகள் இருப்பதாக ஸ்வீடன் வங்கியினர் சொல்கின்றனர்'' என்று மழுப்பிப் பார்க்கிறார் ராஜீவ். பத்திரிக்கைகள் கை கொட்டிச் சிரிக்கின்றன. இதை ஏற்றுக் கொள்வதற்கும் தலை யாட்டுவதற்கும் யாரும் இல்லை— இரண்டுகால் காங்கிரஸ் பிராணிகளை த தவிர.

'சண்டே' ஆங்கில வார ஏட்டிற்கு அளித்துள்ள பேட்டியில் கூறுகிறார். ''ஒருவேளை நியாயமான காரணங்களுக்காக 64 கோடி ரூபாய் தரப்பட்டிருக்குமானால் அதை நாம் எப்படித் தட்டிக் கேட்க முடியும்? போட்டித் தொழில் நிறுவனங்களை உளவறிவதற்காக அவர்கள் கொடுத்திருக்கலாமல்லவா? அப்படி இருந்தால் நாம் அதைக் கேட்க முடியாதே! அதுதான் என்று நான் சொல்லவில்லை. ஒரு ஊகம் தான்!''

கணக்கு முடிப்பதற்காக கொடுத்த தொகை, வேறு பேரத்துக்கு கொடுத்த கமிஷன், கடைசியாக இந்த 'நியாயமான' காரணம். இந்த விவகாரம் தொடங்கிய நாளிலிருந்து போபர்ஸ் நிறுவனத்தின் முதலாளிகள் கூட தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக இத்தனை முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. தனது கட்சிக்காரருக்காக வாதாடும் வக்கீலைப்போல 'ஏன் அப்படி இருக்கக் கூடாது'' ஏன் இப்படி இருக்கக் கூடாது' என்று எத்தனை கோணங்களில் ஆராய்ச்சி? போபர்ஸ் நிறுவனத்தைத் தப்ப வைப்பதற்கானமுயற்சியில்(அதாவது தன் தலையைத் தப்ப வைத்துக் கொள்ளும் முயற்சியில்) என்ன பேசுகிறோம் என்பதுகூடத் தெரியவில்லை ராஜீவுக்கு.

போட்டித் தொழில் நிறுவனங்களை உளவறிவது நியாயமான காரணமாம்! எந்தத் தொழிலில்? ராணுவத் தளவாடத் தயாரிப்புத் தொழிலில் கூமர் நாராயண் என்ற நபர் எதற்காகக் கைது செய்யப்பட்டான்? அன்றைக்கு ராஜீவின் பிரதான செயலாளராக இருந்த அலெக்சாண்டரும் (இன்றையதமிழக ஆளுநர்) மேலும் பல அதிகாரிகளும் எதற்காக மாற்றப்பட்ட









படிப்பகம்

www.padippakam.com

னர்? நினைவில்லையா? ராணுவ ரகசியங்களை உளவறிந்ததற்காகத்தான். அவர்கள் கைது செய்யப்பட்ட கையோடு டெல்லியிலிருந்த பிரெஞ்சு தூதரகத்தின் ராணுவ இணைப்பகம் ஏன் இழுத்து மூடப்பட்டது? ஒரு வேளை கூமர்நாராயண் பிரெஞ்சுக் கம்பெனிகளுக்குப் பதிலாக் போபர்ஸுக்காக உளவறிந்திருந்தால், அதற்காக 64 கோடி ரூபாய் ஊதியமாகப் பெற்றிருந்தால் அது நியாயமானது நம்மால் கேள்வி கேட்கப்பட இயலாது. அப்படித்தானே?

யாருக்கும் எந்த வடிவத்திலும் எதுவும் தரப்படவில்லை என்று தொடங்கிய திருவாளர் பரிசுத்தம் இன்று என்னென்ன நியாயமான காரணங்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று வாதாடிக் கொண்டிருக்கிறார். ''இந்து பத்திரிக்கை வெளியிட்டுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் கமிஷன் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நிருபணமாகிறதே'' என்று சென்ற 16ம் தேதி நிருபர்கள் கேட்டதற்கு ''அதை நாங்கள் என்றுமே மறுக்கவில்லையே. அது குறித்துத்தான் சிபிஐ விசாரித்துக் கொண்டிருக்கிறது'' என்று ஒரே போடாகப் போட்டார் ராஜீவ். அதிர்ந்து போனார்கள் நிருபர்கள். அந்தக் கணம் வரை பேசிக் கொண்டிருந்ததை இல்லவே இல்லை என்று சொல்வதற்குப் பெயர் என்ன அண்டப்புளுகா அல்லது தெரிந்தும் மறைத்து வைத்த உண்மை வாய்தவறி வெளியே வந்துவிட்டதா?

அது என்ன சி.பி.ஐ விசாரணை? சிபிஐ இந்துப்பத்திரிக்கை வெளியிட்ட ஆவணங்களின் பின்னால் மறைந்திருக்கும் உண்மையைக் கண்டறிய முயற்சிக்கிறதாம்! எத்தனை மாதங்களாக? இந்துப் பத்திரிக்கை செய்தி வெளியிட்ட சில நாட்களிலேயே சிபிஐ தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று ஆரவாரமாக அறிவித்தார் ராஜீவ். நாட்கள் மாதங்களாக நீளுகின்றன. ராஜீவின் ஏவல் நாயான சிபிஐ இயக்குனர் மோகன் கத்ரேயின் பதவிக் காலமும் நீட்டிக்கப்படுகிறது. ஆனால் அறிக்கையைத்தான் காணோம்.

எப்படி வரும் அறிக்கை? திருடனே துப்புதுலக்கி திருட்டைக் கண்டுபிடித்ததாக வரலாறு உண்டா? ஆனால் ராஜீவ் காந்தி சொல்கிறார். பாராளுமன்ற கூட்டுக் கமிட்டியின் முன்னால் விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட போபர்ஸ் நிறுவன அதிகாரிகளைக் குடைந்துஎடுத்துவிட்டார்களாம். அநாகரிகமான முறை என்று சொல்லத்தக்க அளவு அவர்களைத் தோண்டித் துருவி விசாரித்து விட்டார்களாம்.

ஆனால் இந்த விசாரணையைத் துவக்குவதற்கு முன்னால் கமிட்டித் தலைவர் சங்கரானந்த் கமிட்டி உறுப்பினர்களிடம், ''நாம் அவர்களைக் குறுக்கு விசாரணைசெய்வதுபோல அவர்கள் நினைத்துவிடக்கூடாது. அவர்கள் மனதைப் புண்படுத்துவதாக அவர்கள் நினைக்க நாம் இடம் தரக் கூடாது'' என்று பீடிகை போட்டுத்தான் விசாரணையையே துவக்குகிறார். விசாரணை நடந்த லட்சணத்தைப் பற்றி ஆலடிஅருணா ஊர்ஊராகச் சென்று விளக்கிய பின்னரும் துணிந்து சரடுவிடுகிறார் ராஜீவ்.

அவர்கள் தன்னைத் தனியாக சந்தித்திருந்தால் மேலும் சில தகவல்களைத் தந்திருப்பார்களென்றும், அவ்வாறு சந்தித்து போதிய விவரம் கிடைக்காமலும் போய்விட்டால் ஏதோதான் அவர்களுக்கு வாய்ப்பூட்டு போட்டுவிட்டதாகப் பிரச்சாரம் செய்வார்கள் என்ற காரணத்தினால் தான் அவ்வாறு முயற்சிக்கவில்லை என்று உத்தமர் வேடம் வேறு போடுகிறார் ராஜீவ்.

எதற்கு இத்தனை சிக்கல்? எதற்கு இத்தனை குழப்பம்? வின்சத்தா, இந்துஜா ஆகிய இருவர் தரகர்களாக செயல்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன. அவர்கள் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்து அதனடிப்படையில் ஸ்விஸ் அரசிடம் அவர்களது வங்கிக் கணக்கு விவரங்களைக் கோரினால் அந்நாட்டின் சட்டப்படியே அவர்கள் தரவேண்டும். தரத் தயாராகவும் இருக்கிறார்கள்.

''நீங்கள் ஏதாவது துப்பு கொடுங்கள். நிரூபிக்கத் தேவையில்லை. நாங்கள் நிரூபிக்கிறோம். இடைத் தரகர் இருந்ததற்கோ, பணம் கொடுக்கப்பட்டதற்கோ, லஞ்சமோ, கமிஷனோ தரப்பட்டதற்கோ ஏதாவது ஆதாரம் இருந்தால் கொடுங்கள். நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். அவர்கள் யாராக இருந்தாலும் சரி; எவ்வளவு உயர்மட்டத்தில் இருந்தாலும் சரி; தப்பிக்க விட மாட்டோம்'' என்று சென்ற ஏப்ரல் மாதம் 20ம் தேதி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளை நோக்கி ஆர்ப்பரித்தார் ராஜீவ்

கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கும் நபர்களின் வங்கிக் கணக்குகளை வெளிக் கொண்டுவர ஸ்விட்சர்லாந்து நாட்டுச் சட்டமே இடமளிக்கிறது என்று சென்ற ஆண்டு ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் பேசினார் நிதியமைச்சர்.

ஆனால் இன்று—ஆதாரங்கள் மலைமலையாய்க் குவிகின்றன. 'நீ யாருடைய ஏஜெண்டு?' என்று எதிர்க்கட்சிகள் நேரடியாகக் கேள்வி கேட்கின்றன. போதிய ஆதாரங்கள் இல்லை என்கிறார் ராஜீவ். அதுமட்டுமல்ல; ஒன்றுமே நடக்காதது போலவும், ஏதோ பொய்யாக, கற்பனையா இந்தக் குற்றச்சாட்டு வேண்டுமென்றே சுமத்தப் படுவது போலவும் பேசுகிறார். ''இப்படி ஏதாவது கூச்சல் போட்டால் உடனே ஒப்பந்தத்தை ரத்து செய்யவேண்டும் என்றால் எதிர்காலத்தில் நாம் ராணுவ தளவாடங்களே வாங்க முடியாது'' என்று எச்சரிக்கிறார். ஏதாவது கூச்சலாம்! என்ன திமிர் இருந்தால் இப்படிப் பேச முடியும்? உலகமே சிரிக்கின்ற அளவு நாறிப் போன பின்னாலும், தன்னுடைய தலையைக்கண்டால் கிடைக்கிற ஓட்டும் கிடைக்காது என்று பயந்து அலகாபாத் பக்கம் தலைவைத்துக் கூட படுக்காமல் முக்காடு போட்டுக் கொண்டு ஓடும் நிலைமையிருந்தும் இப்படிப் பேசக்கூடிய நபரை என்னவென்று சொல்வது?

போபர்ஸ் ஊழல் விவகாரத்தில் மட்டுமல்ல; எந்த விஷயத்

## பீரங்கித்திருடன் வருகை! எட்டாவது முறையாக தி.க.வினர் கைது!

பாசிஸ்டுகளுக்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் மருந்துக்குக்கூட தொடர்பு கிடையாது. இதை மீண்டும் நிரூபிக்கும் வகையில், பீரங்கித் திருடன் ராஜீவ் தமிழகத் தேர்தலில் ஓட்டுப் பொறுக்க எட்டாவது முறையாக தமிழகம் வருவதையொட்டி கோவை மாவட்ட திராவிடர் கழகத்தைச் சேர்ந்த கு. இராமகிருஷ்ணன், வெ. ஆறுச்சாமி ஆகியோர் தொடர்ந்து எட்டாவது முறையாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு புறம் குடிசை தோறும் முன்னறிவிப்பின்றி சுதந்திரமாகச் செல்வதாக பம்மாத்து செய்து கொண்டு, மறுபுறம் கோடிக் கணக்கில் நமது வரிப் பணத்தை வாரியிறைத்து அரசு செலவிலேயே தேர்தல் பிரச்சாரம் செய்து கொண்டு, பாதுகாப்பு என்ற பெயரில் ஜனநாயக உரிமைகளை காலில் போட்டு நசுக்குகிறது ஆளும்பாசிச ராஜீவ் கும்பல்.

தகவல்:
ம.க.இ.க; கோவை.



படிப்பகம்


தைப் பேசினாலும் ராஜீவின் திமிர்த்தனமும் முட்டாள்தனமும் நீ முந்தி நான் முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு வெளியே வருகின்றன. பத்திரிக்கையாளர்களுக்குப் பயந்து ஓடி ஒளிந்து கடைசியாக நீண்ட நாட்களுக்குப்பிறகு 'சண்டே' ஆங்கில இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் ராஜீவின் பதில்கள் மேற்கூறியதைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

பேட்டியின்போது மாநில அரசுகளின் ஊழல் பற்றிய பேச்சு வந்தவுடனேயே எதிர்க்கட்சி முதல்வர்கள் எல்லோர்மீதும் ஊழல் புகார்களை அடுக்குகிறார். "அதெல்லாம்இருக்கட்டும்.உங்களுடைய ஆட்கள்மீது ஏகப்பட்ட ஊழல் புகார்கள் இருக்கின்றனவே" என்று நிருபர் கேட்டவுடன் "வெறும் வதந்திகளை வைத்து நடவடிக்கை எடுக்க முடியாது" என்று பதில் வருகிறது ராஜீவிடமிருந்து. "அப்படியானால் தேவிலால்மீதும் புகார் நிரூபிக்கப்படவில்லையே" என்று நிருபர் திருப்பிக் கேட்டவுடன் "அதனால்தான் நாங்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை" என்று மீசையில் மண் ஒட்டாதது போல நடிக்கிறார்.

மற்ற எல்லா எதிர்க்கட்சி முதல்வர்களையும் சாடும் ராஜீவ் ஜோதிபாசுவுக்கு மட்டும் வக்காலத்து வாங்குகிறார். "ஜோதிபாசு ஊழல் செய்து தனக்கு சொத்து சேர்த்துக் கொண்டிருப்பார் என்று நான் நம்பவில்லை... ஆனால் பாருங்கள். கட்சிகளை நடத்த நன்கொடை வேண்டும். நன்கொடைக்கு கம்பெனிகளையும், தனி நபர்களையும் அணுகித்தானே ஆக வேண்டும்?" எப்படிஇருக்கிறதுபாருங்கள். திருவாளர் பரிசுத்தத்தின் கோட்பாடு! பிறகென்ன லஞ்சமாவது, ஊழலாவது! ஜனநாயகத்தைக் காப்பாற்ற கட்சிகள் வேண்டும்— கட்சி நடத்தப் பணம்வேண்டும் நன்கொடை கொடுக்க கம்பெனிகள் வேண்டும்— ஆக, ஜனநாயகமும் ஊழலும் இணைபிரியாத இரட்டையர்கள்!

இப்படி ஒரு தத்துவத்தை உதிர்த்துக் கொண்டே அந்துலே ஊழல் செய்துவிட்டதால் வெளியேற்றி விட்டதாக சவடால் அடிக்கிறார் ராஜீவ். உயர்நீதிமன்ற தீர்ப்புக்குப்பின் வேறு வழியில்லாமல் அந்துலே வெளியேற்றப்பட்டது ஊரறிந்த விஷயம். அது ஒரு புறம் இருக்கட்டும். "ஊழல் பேர்வழியைச் கட்சியில் மட்டும் ஏன் இன்னமும் வைத்திருக்கிறீர்கள்?" என்ற நிருபரின் கேள்விக்கு மட்டும் ராஜீவிடமிருந்து பேச்சு மூச்சில்லை.

[illegible] வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதை கண்காணிப்பதன் மூலம் ஊழல் பேர்வழிகளைக் கண்டுபிடித்து விடலாம் என்று சொன்னீர்களே, உங்கள் நெருங்கிய நண்பர் சதீஷ் சர்மா ஏற்கனவே ஒரு விமானியாக இருந்தவர். இன்று இத்தாலியிலிருந்து பளிங்குக் கற்களை இறக்குமதி செய்து நீச்சல் குளம் கட்டியிருக்கிறாரே, எப்படி சாத்தியம்? பளிங்குக் கற்களை விடுங்கள் ஒரு விமானி நீச்சல் குளம் கட்டிக் கொள்ளும் அளவுக்கா சம்பாதிக்கிறான்?" என்று நிருபர் கேட்டதுதான் தாமதம். பல விமானிகளின் வீட்டில் நீச்சல் குளங்கள் இருக்கின்றன என்று ஒரே போடாகப் போட்டு நிருபரின் வாயை அடைத்து விட்டார்




ராஜீவ். இதைப் பத்திரிக்கையில் படித்துவிட்டு 'அதிர்ச்சி' தெரிவித்திருக்கிறார் விமானிகள் சங்கச் செயலாளர்.

பேட்டி முழுவதும் பொய்கள், முன்னுக்குப் பின் முரணான தகவல்கள், திமிர்ப் பேச்சுகள் நிரம்பி வழிகின்றன. ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் போது, தான் ஜனநாயக மரபுப்படி ஆட்சி நடத்துவதாகவும் அதிகாரங்களைத் தன் கையில் குவித்து வைத்துக் கொள்ளவில்லையென்றும் கூறும் ராஜீவ் இன்னொரு இடத்தில் தன்னைச் சுற்றி ஒரு கும்பல் இருப்பதையும் அந்தக் கும்பல்தான் சகல அதிகாரமும் பெற்றது என்பதையும் ஒப்புக் கொள்கிறார்.

பொருளாதாரத் துறையைப் பற்றிக் கேள்வி கேட்கும்போது பொதுத்துறையை ஆதரித்துப் பேசுகிறார்; ஊழல் ஒழிப்பு பற்றிப் பேசும்போது லைசென்ஸ் கட்டுப்பாடுகளையெல்லாம் நீக்குவது தான் என் கொள்கை என்கிறார். தொலைக்காட்சி முழுக்க முழுக்க காங்கிரஸ் ஊதுகுழலாக இருப்பதைச் சுட்டிக் காட்டினால் தான் சமீபத்தில் தொலைக் காட்சி நிகழ்ச்சி எதையுமே பார்க்கவில்லை என்று சத்தியம் செய்கிறார்.

பேட்டி முழுவதும் சாதனைகளுக்குக் காரணம் தான் என்றும் பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் தான் காரணம் என்றும் பழி சுமத்துகிறார். தன்னை அறிவாளியாகவும், உத்தமசீலனாகவும் சித்தரித்துக் கொண்டு தன் கட்சி அமைச்சர்களையும் பிறரையும் கேலிக்குரிய நபர்களாக்குகிறார். இதில் இரண்டாவது விஷயமென்னவோ உண்மைதான்.

மடமை, கோழைத்தனம், புளுகுணித்தன்ம், திமிர் ஆகிய இந்த குணங்களின் இருப்பிடம், தலைமை தாங்க தின்பதற்கு வயிறையும், ஊளையிடுவதற்கு வாயையும், அடித்துப் பிடுங்க கைகளையும் மட்டுமே கொண்ட கூட்டம் காங்கிரஸ் என்ற பெயரில் ஆட்சி நடத்துகிறது. இது ஓராயிரம் முறை நிரூபிக்கப்பட்ட உண்மை தானென்றாலும் ஆயிரத்தொன்றாவது முறையாக போபர்ஸ் ஊழல் பற்றி பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் ஐயந்திரிபற இதை நிரூபித்திருக்கிறது. இந்தக் கொள்ளைக் கூட்டத்தின் பிடியிலிருந்து நாட்டை மீட்பது எப்படி என்பதுதான் கேள்வி.

எதிர்க் கட்சிகளோ மண் குதிரைகள். இல்லை.மாயக்குதிரைகள். ஒரு நாளைக்கு 10 கேள்வி வீதம் கேட்ட குரைக்கும் நாய் (ராம்ஜேத்மலானி) தன் ஜெமானன் இந்துஜாவின் பெயரும் சம்பந்தப்பட்டவுடன் வாயை மூடிக்கொண்டு விட்டது.' திருவாளர் புதிய பரிசுத்தம் வி.பி.சிங்கைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. அந்துலே விவகாரம் சிரிப்பாய் சிரித்தபோது இந்திராவின் பக்கம் அணிவகுத்து நின்ற நேர்மையாளர் அவர். தேவிலால், ஜோதிபாசு, ராமாராவ் எல்லோருமே தத்தம் வாரிசுகளுக்கும், சொந்த பந்தங்களுக்கும் அவரவர் மாநில மக்களைப் பிழிந்து விருந்துவைத்துக் கொண்டிருக்கின்றனர். போபர்ஸ் ஊழல் எனும் ஆயுதத்தை வைத்துக் கொண்டு அடுத்த தேர்தலைச் சந்திக்க அவர்கள் காத்திருக்கின்றனர். லஞ்சம், ஊழல், பகற்கொள்ளை, அராஜகம் ஆகியவற்றால் கலகலத்துப் போயிருக்கும் நாடாளுமன்றம் மக்கள் புரட்சியில் உயிர்விடுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

○

—பஷீர்



www.padippakam.com
படிப்பகம்

# போபார்ஸ் விவாதமா? ரௌடித்தனமா?

பாராளுமன்றத்தை இனி பன்றித் தொழுவம், சோம்பேறி மடம், அரட்டை மண்டபம் என்றெல்லாம்எழுதமுடியாது. புதிதாக ஏதாவது வார்த்தையைக் கண்டு பிடிக்கவேண்டும். போபர்ஸ் பிரச்சினை குறித்து எதிர்க்கட்சிகள் எழுப்பிய பிரச்சினையை காங்கிரஸ் கட்சியினர் கையாண்ட முறையில் தங்களது முந்தைய சாதனைகளையெல்லாம் முறியடித்துவிட்டனர். இந்திய பாராளுமன்ற வரலாற்றிலேயே இதுவரை இல்லாத இன்னொரு சாதனையும் நிகழ்த்தப் பட்டிருக்கிறது. உள்துறை அமைச்சர் பூட்டாசிங்கின் பேச்சு சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை இது உலக சாதனையாகக்கூட இருக்கக்கூடும்.

"பாராளுமன்றத்தில் கூச்சல் போட்டிருக்கிறார்கள், குழப்பம் நடந்திருக்கிறது. ஆனால் விவாதம் இவ்வளவு கீழ்த்தரமாக, ஆபாசத்தின் எல்லைக்கே சென்றதில்லை. நேரு நூற்றாண்டு விழாவில் இப்படியா நடக்க வேண்டும்?" என்று ஒப்பாரி வைக்கிறார்கள் முதலாளித்துவ பத்திரிக்கையாளர்கள்.

www.padippakam.com என்ன பேசினாலென்ன, 'அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது' என்ற சர்வரோக நிவாரணி கையில் இருக்கும் வரையில் நாடாளுமன்ற அவைக் குறிப்புப் புத்தகத்தைப் பொறுத்த வரையில் ஜனநாயகம் பாதுகாப்பாக, நாகரிகமானதாகவே இருக்கும். என்ன நடந்தது, என்ன பேசிக் கொண்டார்கள், என்பதெல்லாம் பத்திரிக்கைகளில் வந்துள்ள அளவுக்குத்தான் நமக்கும் தெரியும்

"போபர்ஸ் விவகாரத்தை 'ஆராய்ந்த' பாராளுமன்றக் கூட்டுக் கமிட்டி யாருக்குமஎதுவும் தரப்படவில்லை என்று கூறுகிறது. பிரதமரோ கமிஷன் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று பத்திரிக்கையாளர்களிடம் ஒப்புக் கொண்டுள்ளார். எனவே ஏற்கனவே நீங்கள் பாராளுமன்றத்தில் பொய்த்தகவல் கொடுததுள்ளீர்கள்" என்று உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தன எதிர்க்கட்சிகள். "இந்து பத்திரிக்கை வெளியிட்ட ஆதாரங்களுக்கு பதில் என்ன? இதோ இருக்கிறது. ஆதாரம். ஒன்று ராஜீவ் பதவி விலகட்டும் அல்லது அரசு ராஜினாமா செய்யட்டும்" என்றார் வி. பி. சிங். இப்படித்தான் தொடங்கியது போபர்ஸ் குறித்த விவாதம்.

"பாட்னாவில் ஸ்விஸ் வங்கி கணக்கு எண்ணை குறிப்பிட்டு ராஜீவ்தான் கமிஷன் வாங்கியிருக்கிறார் என்று பேசியதை இங்கே வி.பி.சிங் உறுதிப்படுத்துவாரானால் நாம் உருப்படியாக விவாதிக்கஉதவியாகஇருக்கும்"என்றார் பூடாசிங். "விவகாரம் அதுவல்ல. நான் இங்கே கொடுத்திருக்கும் ஆவணங்கள் உண்மையானவை என்று நான் உறுதி செய்கிறேன்" என்றார் வி.பி.சிங். உடனே கேகே திவாரி "நீங்கள் கவுரவமானஉறுப்பினர்என்றால்(அதாவது உனக்கு தைரியமிருந்தால்) ராஜீவ் காந்தியைப் பற்றி பேசியதையும் இங்கே உறுதி செய்யவேண்டும்" என்று சவால்விட வி.பி.சிங் அதையும் உறுதி செய்தார்.

இதுதான் விவாதத்தின் துவக்கமும் முடிவும். அதன்பிறகு ஒரே கூச்சல்—ரகளை. மிகவும் பொருத்தமாக பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் எச்கேஎல் பகத் விபிசிங்கை நோக்கி "குற்றச் சாட்டை நிரூபி. இல்லையேல் வெளியே ஓடு!" என்று முழங்கி தமது 'விவாதத்தை' துவக்கினார். "பிதற்றாதே நீங்களெல்லாம் சீர்குலைவு சக்திகளின் ஏஜெண்டுகள்" என்று உறுமினார் வி. என் காட்கில். வெளியுறவுத்துறை ராஜாங்கஅமைச்சர் கே கே திவாரி மீண்டும் எழுந்தார் "உனக்கு தைரியமிருந்தால் இன்னொரு முறை இங்கே அந்தக் குற்றச் சாட்டை சொல் பார்க்கலாம்" என்று சவால் விட்டார். "பயந்தாங்கொள்ளி, கோழை! இன்னொரு முறை சொல்வதற்கே




பயந்து சாகிறார்" என்று ஊளையிட்டார் எரிசக்தித்துறை அமைச்சர் வசந்த் சாத்தே.

இதற்கிடையில் பாராளுமன்ற

## அண்டபுளுகுக்கு ஆப்பறையும் ஆதாரங்கள்

போதிய ஆதாரங்கள் இல்லை என்று ராஜீவ் மழுப்பும்போது மேலும் மேலும் ஆதாரங்கள் வந்து குவிகின்றன. வின் சத்தா இந்துஜா ஆகியோர் போபர்ஸ் பேரத்தில் இடைத்தரகு வேலை செய்ததற்கான முக்கியமான ஆதாரங்களை 25ம் தேதி இந்துப் பத்திரிக்கை மீண்டும் வெளியிட்டுள்ளது.

போபர்ஸ் நிறுவனம் பனாமாவைச் சேர்ந்த ஸ்வென்ஸ்கா நிறுவனத்திற்கு மார்ச் 15, 1984 அன்று எழுதிய கடிதத்தின் நகலை 'இந்து' வெளியிட்டுள்ளது. அக்கடிதத்தின் சாராம்சம்:

"இந்தியாவுக்கு ஹோவிட்சர் பீரங்கி, உதிரிப் பாகங்கள் மற்றும் வெடி மருந்து விற்பதற்கு நீங்கள் விசேட முயற்சி எடுத்துள்ளீர்கள். இதற்கு 6 சதவீதம் கமிஷன் உங்களுக்குக் கொடுக்க நாங்கள் பொறுப்பேற்கிறோம். ஆனால் அதற்குமுன், உங்களது முயற்சியால்தான் இந்தஒப்பந்தம் போடப்பட்டது என்பதை இந்தியாவிலுள்ள எங்கள் பிரதிநிதி (வின் சத்தா) உறுதி செய்ய வேண்டும். கமிஷன் தொகையை நீங்கள் விரும்புகின்ற எந்த தேசத்தின் செலாவணியிலும் கொடுக்கத்தயாராக இருக்கிறோம். கீழ்க்கண்ட தவணைகளில் பணம் உங்களுக்குத் தரப்படும்..."

இது மட்டுமல்ல; சென்ற ஆண்டு போபர்ஸ் ஊழல் அம்பலமானவுடனே போபர்ஸ் நிறுவனத்தின் பழைய தலைவர், 'ஆர்ட்போ'வும் பாராளுமன்ற கூட்டுக் கமிட்டிக்கு சாட்சி சொல்ல வந்த போபர்ஸ் அதிகாரிகளும், இந்துஜாவும் லண்டனில் ரகசியமாகச் சந்தித்துப் பலமுறை பேசியுள்ளனர் என்பதும் அம்பலமாகியுள்ளது. 'ஆர்ட்போ' தனது டயரியில் எழுதியுள்ள குறிப்புகளை இதற்கு ஆதாரமாகக் காட்டுகிறது 'இந்து'. மேலும் இந்த டயரியினி

படிப்பகம்

www.padippakam.com

ஊழல்கள் மீறப்படுவது குறித்து கவலை கொண்ட ஒரு எதிர்க் கட்சி உறுப்பினர் "கோழை" என்ற சொல்லைப் பயன்படுத்துவதை ஆட்சேபித்தார். எழுந்தார் சிதம்பரம். அது ஒன்றும் தவறல்ல கோழை என்றால் வீரம் இல்லாதவர் என்று பொருள் அவ்வளவு தான்" என்று விளக்கமளித்தார். என்ன இருந்தாலும் பாராளுமன்ற இலக்கிய ஆர்வலராயிற்றே! இனி சிதம்பரத்தின் அகராதியின்படி முட்டாள் (அறிவில்லாதவர்) சோம்பேறி (சுறுசுறுப்பில்லாதவர் அயோக்கியன(யோக்கியமாக இல்லாதவர்) ஆகியஎல்லா வார்த்தைகளையும் பயன்படுத்தலாம். விவாதம் சுவையாகவே இருக்கும்.

மறுநாள் விவாதத்திற்கு 'பதிலளித்து' பேசினார் பூட்டாசிங் போபர்ஸ் விவகாரத்தைப் பற்றி ஒரு வார்த்தை கிடையாது. "விபிசிங் ஒரு பைத்தியம். இதற்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது பூதான இயக்கத்தில் தானம் கொடுத்த நிலத்தை திரும்பப் பெறுவதற்காக உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில் 'எனது கணவர் புத்தி சுவாதீனமில்லாத நிலையில் நிலத்தை தானம் கொடுத்துவிட்டார்' என்று விபிசிங்கின் மனைவியே கூறியிருக்கிறார்." என்று தொடங்கினார் பூட்டாசிங். "அவையில் இல்லாதவர்களைப் பற்றி பேசக்கூடாது" என்றார் தண்டவதே. பூட்டாசிங் லட்சியம் செய்யாமல் தொடர்ந்தார். "ஆக்ரா பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வி.பி.சிங் இருந்ததற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது" என்றார். "அப்படியானால் ஒரு பைத்தியத்தை இத்தனை நாள் நிதியமைச்சராக வைத்திருந்தீர்களா?" என்று எதிர்க் கேள்வி எழுப்பினார் 'மார்க்சிஸ்டு' உறுப்பினர். "என்னைக் கேட்காதீர்கள், அந்தப் பைத்தியத்தை ஜனதா தள கட்சியின தலைவராக கப் போகிறாரே மது தண்டவதே, அவரைக் கேளுங்கள்" என்று கூறிவிட்டு விபிசிங்கின் குடும்ப டிரஸ்ட் விவகாரங்களைக் கிளறத் தொடங்கினார். விபிசிங் தனது சொத்துக்கள் பற்றி அறிவித்திருப்பதெல்லாம் பொய் என்று குற்றம் சாட்டினார். "வெட்கக் கேடு! ஒரு மத்திய அமைச்சர் இத்தனை தரம் தாழ்ந்துபோக வேண்டுமா?" என்று தண்டவதே கூச்சல் போட அதைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் தான் பேசவேண்டியதையெல்லாம் பேசி முடித்தார் பூட்டாசிங். இடையிடையே காங்கிரஸ்குண்டர்களின் (எம்.பி.க்களின்) கூச்சல்கள், ஊளைகள், ஆரவாரங்கள், கைதட்டல்களுடன் பூட்டாசிங் பேசி முடிக்க போபர்ஸ் விவாதம் முடிந்தது. இந்த விவாதம் தொடங்கி முடிவடையும் வரையில் ராஜீவ் காந்தி பாராளுமன்றத்தின் பக்கமே தலைவைத்துப் படுக்கவில்லை! எல்லாம் முன் கூட்டி வகுத்த திட்டந்தானே! ஒன்று ராஜீவே பயந்து ஒளிந்திருக்கவேண்டும். அல்லது இந்த ஊளறுவாயன் வராமலிருப்பதே நல்லது என்பதால் தொண்டர்களும் ஆலோசாகர்களும் பணிவோடுஅவருக்குஎடுத்துச் சொல்லியிருக்கவும் கூடும்.

நடந்திருப்பதைக் கேட்டு ரசிப்பதற்கு அது கதையல்ல; அவமானப் படுத்தப்பட்டிருப்பவர்கள் எதிர்க்கட்சிக்காரர்களும் அல்ல (ஏனென்றால் அவர்கள் ஏற்கனவே மானத்தை விற்றவர்கள்) மக்களின் வரிப்பணத்தை கோடிக் கணக்கில் ஏப்பம் விட்டுவிட்டு "உங்களால்என்னசெய்யமுடியும்" என்று காங்கிரஸ்கும்பல் முண்டா தட்டுகிறது. பதில் சொல்லவேண்டியது நமது கடமை ரவுடித்தனத்தைஓட்டுச் சீட்டால் அடக்க முடியாது!

---

ருந்து 1987, அக்டோபர் 15ம் தேதி இந்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைமைச்செயலர்ஆர்ட்போவுக்கு ரகசியமாக ஏதோ கடிதம் எழுதியுள்ளார் என்பதும் அம்பலமாகியுள்ளது.

போபர்ஸ் ஒப்பந்தம் கையெழுத்தான தேதி 24-3-86. ஆனால் 16-4-87க்குப் பின் அதாவது ஊழல் அம்பலமானபின் தன் ஏஜெண்டுகளுக்கு போபர்ஸ் நிறுவனம் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளது. "இடைத்தரகர்கள், கமிஷன் ஆகியவை கூடாது என்பது இந்திய அரசின் கொள்கையாக இருப்பதால் 'கணக்கு முடிப்பது' என்ற பெயரில் நாம் ஏற்பாடு செய்து கொள்வோம்."

இதைவிட கேலிக்கூத்து வேறென்ன வேண்டும்? "நவம்பர் 25ம் தேதி இந்து பத்திரிக்கை வெளியிட்டுள்ள இந்த ஆவணங்களுக்கு அரசு என்ன பதில் சொல்லப் போகிறது?" என்று மறுநாள் பாராளுமன்றத்தில் மதுதண்டவதே கேள்வி எழுப்பினார். ஒத்திவைப்பு தீர்மானத்துக்கு அனுமதி மறுத்தார் சபாநாயகர். உடனே காங்கிரஸ்காரர்கள் வழக்கம் போலக் கூச்சல் போட்டு எதிர்க் கட்சிகளை அடக்கினர்.

எத்தனை ஆதாரங்கள் வந்தாலென்ன? நான்தான் கொடுத்தேன் என்று போபர்ஸ் நிறுவன முதலாளிகள் வந்து சொன்னாலும் சரி... பாராளுமன்றத்தின் மூலம் பீரங்கித் திருடன் ராஜீவைத் தண்டித்துவிட முடியுமா என்ன?

---

## காங்கிரசு கழிசடைகளின் கயவாளித்தனம்

பீரங்கித் திருடன் பாசிச ராஜீவுக்குக் கருப்புக் கொடி காட்டிய விவிமு தோழர்களைக் கைது செய்து, கீழ்த்தரமாக ஏசி போலீஸ் நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பெருமாள்சாமியைக் கண்டிக்கும் பொதுக் கூட்டம், கடந்த நவம்பர் 12ந் தேதியன்று உசிலம்பட்டியில் நடைபெற்றது.

பாசிச கும்பலின் விசுவாச நாயாகச் செயல்படும் போலீசை அம்பலப்படுத்தி தோழர்கள் விரிவாகப் பேசினர். பின்னர் புரட்சிகரப் பாடல்களைப்பாடத் துவங்கியதும் காங்கிரசு குண்டர்கள் சேற்றை வாரி மேடையில் எறிந்து ஊளையிட்டனர். அதன்பிறகு ம.க.இ.க இணை செயலர் தோழர் கதிரவன் பேசும்போது, இந்த கயவாளிகள் 'ராஜீவைப் பற்றி பேசக்கூடாது' என்று மீசையை முறுக்கி உடலை வளைத்துக் கொண்டு வந்தனர் அவர்களின் கூட்டாளிகளான போலீஸ் நாய்கள் அவர்களை அமைதிப்படுத்தி இழுத்துச் சென்றன.

இந்த சலசலப்புகளுக்கு அஞ்சி தொடை நடுங்கக்கூடிய கோழைகள் அல்ல நாங்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் தோழர் கதிரவன், 'ராஜீவின் பரம்பரையே ஊழல் திருட்டுப் பரம்பரை, தேசவிரோத—மக்கள் விரோத பரம்பரை' என்பதை எடுப்பாக தோலுரித்துக் காட்டி உணர்ச்சி பொங்க உரையாற்றினார்.

இப்பொதுக் கூட்டத்திற்கு ஏறத்தாழ ஆயிரத்துக்கும் மேல் திரண்டிருந்த மக்கள், நன்கொடையளித்து பெரிதும் ஒத்துழைத்ததோடு, 'விவிமுக்காரர்கள் பேசுவதில் என்ன தவறு இருக்கிறது?' என்று கேட்டு காங்கிரசு கயவாளிகளின் மூஞ்சியில் கரி பூசினர். சட்டம் ஒழுங்கைக் காப்பதாகக்கூறி இரண்டு பத்து மணிக்குமேல் போலீசு மின் துண்டிப்பு செய்து இடையூறு செய்த போதிலும் பாசிச ராஜீவ் கும்பலுக்கும், அதன் எடுபிடி போலீஸ் நாய்களுக்கு எதிராக இக்கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி
உசிலை வட்டம்

படிப்பகம்

www.padippakam.com

**தயார் உணவு**

# அழகாய் விற்கிறது ஆடம்பர போதை!

ஜெயந்தி அலுவலகத்திலிருந்து இப்போதுதான் திரும்பியிருக்கிறாள். களைப்பு—களைப்பு. அவளது குழந்தைகள் சுற்றிச் சுற்றி வருகின்றன. கணவன் வருவதற்குள் வீட்டு வேலைகள் எல்லாம் நடக்கவேண்டும். அத்தனைப்பேருக்கும் சோறு தயாரிக்கவேண்டும். யாராவது உதவிக்கரம் நீட்டமாட்டார்களா —ஏங்குகிறாள் அந்த நடுத்தரவர்க்க ஜெயந்தி.

"நானிருக்கிறேன், ஏன் கவலைப்படுகிறீர்கள்?" என்று ஜீபூம்பா பூதம் கைகட்டி வந்து நிற்கிறது. "என்ன வேண்டும் சொல்லுங்கள், உடனே தயார்!" "பாத்திரம் கழுவ வேண்டாம், இரண்டு மூன்று மணிநேரம் சமையல் அறையில் உழல வேண்டாம். எல்லாம் அரைமணியில தயார். சூப்பா, புலவா, நூடுல்ஸ் உப்புமாவா? சைவமா, வைஷ்ணவமா? எதற்கும் கவலை வேண்டாம். எல்லாமே பாக்கெட்டுக்களில் தயார். வாணலியில் போடுங்கள், தண்ணீர் ஊற்றுங்கள், சில தக்காளித் துண்டுகள், கொத்துமல்லி அவ்வளவே—ஒரு அயிட்டம் ரெடி!"

காய்கறிச் சூப்பா, கோழிச் சூப்பா, புலவுக்கலவையா, ரொட்டி—ஜாம், ஐஸ்கிரீம், என்ன வேண்டும், எல்லாமே ரெடி! ஏன் அது கூட தேவையில்லை. உறையை எடுங்கள், முதுகில் உள்ள அட்




டையை நாசுக்காக உருவி எடுங்கள், உள்ளே தயாராக உள்ள சிறுவெப்ப அடுப்பு எரியத் தொடங்கி விடும். அதன் மேல் உறையில் வைத்திருக்கும் தயார் உணவு தானாகச் சூடாகி விடும். சூடான பணியாரம் ரெடி!

அட, இது என்ன மாயா பஜாரா? இதுமாய உலகம்தான். திடீர் உணவு என்ற மாய உலகம். எத்தனை வகை? எத்தனை ருசி? பத்து வருஷத்துக்கு முன்னால் திடீர் ரசம், திடீர் சாம்பார், திடீர் அப்பளம் மட்டுமே சந்தையில் கிடைத்தது. இப்போது எதுவேண்டுமானாலும் கிடைக்கிறது. வேகம், வேகம், எல்லாம் ராஜீவின் வேக மயமாம்!?

உத்தரப் பிரதேசத்தில் ஜமீன்தார்கள், பணக்கார விவசாயிகள் ஒன்றுகூடிப் பேசினார்கள். ஆறு கோடி ரூபாய்க்கு ஒரு ஆலை திறந்து விட்டார்கள்—உருளைக் கிழங்கு வறுவல்—பணியாரங்கள் செய்வதற்காக. ஜமீன்கள் மட்டுமா? டாட்டா, பிர்லா, கோட்சே இந்திய நிறுவனம், அப்போலோ




டயர்ஸ், டால்மியா, டி.டி.கே. என்று தரகுமுதலைக் கூட்டமே கோதாவில் இறங்கி விட்டது. எல்லோருக்கும் இந்திய முன்னேற்றத்தில் அக்கறையாம்—'ஏழைப்பங்காளன்' ராஜீவ் சொல்கிறார்.

அக்கறையாவது, சுக்காவது? மேலை நாடுகளோடு கூட்டுச்சேர இன்னொரு வாய்ப்பு, அதனால் ஓடுகிறார்கள், இதுவே உண்மை.

டாட்டா, பிர்லா அமெரிக்காவோடு. கோட்சே இந்தியா, பைன் ஆப்பிள் துண்டுகளை ஏற்றுமதி செய்ய மேற்கு ஜெர்மனியோடு; ஆரோக்கிய வகை உணவுகளுக்காக அப்போலோ டயர்ஸ் இங்கிலாந்தோடு; பிர்லாவின் ஜுவாரி அக்ரோ நிறுவனம் பீச் பழங்களைப் பதப்படுத்தஜப்பானோடு; இந்தூரில் உள்ள வின்னர் டெக்னாலஜி நிறுவனம் வேகமாக உறைய வைக்கும் சாதனத்துக்காக ஸ்வீடனோடு; — இப்படி லிப்டன், காட்பெரி போன்ற பல நிறுவனங்கள் ஏகாதிபத்தியங்களோடு, பன்னாட்டு நிறுவனங்களோடு கூட்டுச் சேர்ந்து திடீர் உணவு வகைகளைத் தயாரிக்கப் போகிறார்கள்.

காட்பெரி நிறுவனம் 6000 டன் உற்பத்தியிலிருந்து 1 லட்சம் டன் கோகோ உற்பத்திக்குப் பாயப் போகிறதாம். தென்னை, பனைக்கு மத்தியில் ஊடு பயிராக கோகோவை சிறுசிறு துண்டு




நிலத்தில் கூடப் போட்டுப் பயிரிடலாம் என்று லிப்டன் அரசாங்கத்துக்கு பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறதாம்.

ஏன் இந்த திடீர் 'திடீர் உணவு' ஏற்றுமதி? மக்கள் சாப்பிட்டுச் சுபிட்சமாக வாழ்ந்தது போக மீதம் குவிந்து கிடக்கிறதா? அழுகிப்போகிறது, எலிகள் நாசமாக்கி தின்று விட்டுப் போகிறது – உண்மையே. ஆனால் இது மக்கள்சாப்பிட்ட பிறகு உள்ள மீதமல்ல; மக்கள் ஒரிசாவில், பீகாரில் இலைகளைச் சாப்பிடுகிறார்கள், தழைகளைச் சாப்பிடுகிறார்கள். அப்படி இருந்தும் ஆண்டு ஒன்றுக்கு 25 சதவிகிதம் பழம், காய்கறிகள் (570 லட்சம் டன்கள்!), 10 சதவிகிதம் உணவுத் தானியங்கள் அழுகி வீணாவதால் 'ஏற்றுமதி உத்தமம்' என்று சோம்பேறி மடத்து நிர்வாகிகளான அரசு அதிகாரிகள் சொல்கிறார்கள்.

ஜெயந்தி போன்ற நடுத்தர வர்க்கத்தாருக்கே கூட திடீர் உணவுகள் எப்போதும் சாத்தியமில்லை. முடிந்தால் வாங்குவார்கள். அதிலேயே மேல் மட்டத்துக்காரர்கள் நிச்சயம் அனுபவிக்கிறார்கள்; ராஜீவை வாழ்த்துகிறார்கள். இவர்களது அங்கீகாரத்தையே பத்திரிக்கை, டிவி, ரேடியோ மக்களது அங்கீகாரமாக வருணித்துத் தள்ளி விடுகின்றன; திடீர் உணவு ஏற்றுமதியால் நாட்டுக்கு அந்நியச் செலாவணி ஏராளமாக வருகிறது, அத்தனையும் லாபம் என்று அரசாங்கம் மார்தட்டுகிறது.

அண்மையில் தயார் உணவுக்காகவே ஓர் அமைச்சகத்தைத் திறந்திருக்கிறது அரசு. ஜகதீஷ் டைட்லர் அதன் அமைச்சர்.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டே மாதங்களில் எல்லா பெரிய கம்பெனிகளும் தங்களை வந்து அணுகிவிட்டதாகப் பீற்றுகிறார் ஜகதீஷ்டைட்லர். உடனுக்குடனே பல சலுகைகள் அறிவிக்கப்பட்டு விட்டன. உணவுப்




பொருளை அடைக்கும் உறைகளுக்குத் தீர்வை வரி 25சதவீதம் முழுவதும் நீக்கப்பட்டு விட்டது; பாலிலிருந்து தயாரிக்கும் உணவுப் பொருள் மீதான 15 சதவீத வரி நீக்கப்பட்டு விட்டது. உணவுப் பொருள் மீது தற்போது விதிக்கப்படும் 26 சதவிகித வரியில் 14 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படுகிறது; அந்நிய முதலீட்டாளர்கள் நேரடியாகவே கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்களோடு கூட்டுக்கள் வைக்கலாம்; அந்நிய விமானப் போக்குவரத்து தனியாகச் சரக்குப் போக்குவரத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஏர்—இந்தியா என்ற அரசு நிர்வனத்தின் மூலமாக மட்டுமே செய்ய முடியும் என்ற பழைய விதி ரத்து செய்யப்படுகிறது.

விவசாயிகளுக்கு லாபம் தானே என்று சிலர் கேட்கிறார்கள். வெளிச்சந்தையை விட இங்கு குறைவு என்பதே உண்மை. அதற்கும் ஒரு நொண்டி விளக்கம் சொல்கிறார்கள். ''வெளிச் சந்தையில் விற்கும்போது, விவசாயிகளுக்கு வண்டிச் சத்தம் போல பல செலவுகள் உண்டு. விற்கவில்லையானால், பொருள் அழுகிப்போகும், மிகுதியை அழித்துக்கூடப் போடுவார்கள். ஆனால் இங்கு நிச்சயமான அளவு தெரியும், செலவுகள் மிச்சம்'' என்று சொல்கிறார்கள். லாபத்திலே குறியாக உள்ள தரகு முதலாளிகள் என்ன செய்வார்கள் என்று தெரியாதா? கூடுதல் விலை கேட்கும் விவசாயிகளைக் கட்டுப்படுத்த சொல்லி அரசாங்கத்திடம் ஆணை போடுவார்கள் — அது தான் ஈடேறும். விவசாயி அடக்கப்படுவான்.

இனி விவசாயத்தில் என்ன நடக்கும்? உணவுப் பொருள் உற்பத்தி கட்டுப்படுத்தப்படும். இன்ன உணவுப் பொருளை உற்பத்தி செய், இன்ன காய்கறி, இன்ன பழத்தைப் பயிரிடு என்று அரசு கட்டளை போடும். விளைச்சல் போதாது, தரமும் போதாது, சர்வதேச தரத்துக்கு வந்தால் தான் விற்கமுடியும் என்று பயமுறுத்தியே வீரிய ரக விதைகள் வாங்கு என்று கழுத்தில் மிதிப்பார்கள். வெளிநாட்டிலிருந்து தருவித்துக் கொள்ளலாம் என்று சொல்வார்கள். ஆக மொத்தம், வெளிநாடுகளின் விருப்பத்துக்கு, அவர்கள் திட்டப்படி விதை எடுத்துப் பயிர்செய்து, நம்நாட்டின் மலிவான உழைப்பைப் போட்டு, பழம்—காய்கறி போன்றவை உற்பத்தி செய்யப்பட வேண்டும். அவர்களது சந்தைக்கு என்ன தேவையோ அந்த வேலையை நம்நாட்டு விவசாயியும் தொழிலாளியும் செய்து தர வேண்டும். எப்படி அவர்களின் திட்டம்? எப்படி ராஜீவின் புதிய உணவு உற்பத்திக்கொள்கை?

''பழச்சாறு உற்பத்தி விரைவில் மூன்று மடங்காகிவிடும். அப்போது அடைப்புக்கள் தயாரிப்பு விலை கூடி விடும், உள்நாட்டில் தயாரிக்க முடியாது'' என்று சொல்லி அடைப்பு வேலைக்கான பொருளும், அதில் சாறு ஊற்றும் யந்திரமும்இறக்குமதிசெய்யப்படப் போகின்றன. உள்நாட்டுத் தயாரிப்புக்குப் பட்டை நாமம்! இயந்திர இறக்குமதிக் கம்பெனிகள் உலகிலேயே இரண்டு தானாம். அந்த இரண்டும் ஸ்வீடனில் இருக்கின்றன. எந்த ஒரு பொருளிலும் அடிமுதல் நுனிவரை ஏகாதிபத்தியக் கூட்டு ஒப்பந்தங்களுக்குஅடிமைச் சாசனம் எழுதி விடுகிறார்கள்.

நாட்டின் உற்பத்தியைமேலும் மேலும் உள்நாட்டுத் தேவையிலிருந்து வெட்டிப் பிரித்து ஏகாதிபத்திய நாடுகளின் தேவைகளை ஒட்டி மறுவார்ப்பு செய்வதே அவற்றின் நோக்கம். இதற்கு




எதிர்ப்புக்கள் இல்லாமல் ஐந்து நட்சத்திர ஆடம்பர கலாச்சாரம் பார்த்துக் கொள்கிறது. இந்த வலையில் விழுகின்ற மேல்மட்ட நடுத்தரவர்க்கமோ, தொழிலாளரின் ஒரு சிறு பகுதியோ நாட்டின் உற்பத்தி, பொருளாதாரம் பாதிக்கப்படுவதைக் கண்டு கொள்ளப் போவதில்லை; பொருளாதார ஆணிவேர் அறுக்கப்படுவதையோ, அதில் வெந்நீரும், அமிலமும் ஊற்றி எரிக்கப் படுவதையோ பற்றி இவர்களுக்குக் கவலை இல்லை. அவர்கள் இன்றைய பொழுதை அணு அணுவாக அனுபவித்து விட்டார்கள், அது போதும்.

ராஜீவின் வலையில் இழுபடும், பிரச்சாரத்தில் மயங்கும் நடுத்தர மக்கள் இருக்கின்ற பத்திரமான வாழ்க்கையை இழந்து விடக் கூடாதே என்று எப்போதும் சுயநல எச்சரிக்கையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு—டி.வி, ஸ்கூட்டர், மிக்ஸி, கிரைண்டர், குளிர் பதனப்பெட்டி, துணி துவைக்கும் மெஷின்கள், உல்லாசச் சுற்றுலா, சினிமா, வீடியோ, சாராய - கஞ்சாப்போதைகள் வேண்டும், ஓட்டங்களில் பெருந்தீனி தின்ன வேண்டும்; இந்த வாழ்க்கையையே 'சாகசமான,விறுவிறுப்பான வாழ்க்கை' என்று சொல்லிப் பழக வேண்டும்; வேகமான வாழ்க்கைக்குச் சுருதி சேர்க்கும் திடீர் உணவு வகைகளும், ருசிகளும்வேண்டும்; டிவி, ரேடியோ விளம்பரம் இதைச்




சொல்லும்போது சொர்க்கத்தை எட்டி விட்டாற்போலப் பூரிப்படைய வேண்டும்; என்ன வேண்டுமானாலும் செய்து, எப்படியும் எந்த வழியிலும் சம்பாதித்து சொகுசை உல்லாசத்தை அடைய விரும்புவது இவர்களே. ஆனால் பிரச்சாரத்தின் நோக்கம் இந்தியா பூராவும் எல்லாமக்களும் இப்படித் தான் வாழ விரும்புகிறார்கள்என்று எண்ணத் தூண்டுவதே. இருப்பவன் அனுபவிக்க, இல்லாதவன் கோபம் அடையக்கூடாது-எதிர்க்கக்கூடாது—ஆனால் ஏங்கவேண்டும்—இதுவே ராஜீவின் நோக்கம்.

நடுத்தர வர்க்கத்துக்குத் தற்காலிகப்போதை போதும்; சமூகத்தின்மீது குந்தி ஒட்டஉறிஞ்சும் பணக்கார ஒட்டுண்ணிக் கூட்டத்துக்குக் கவலை இல்லை; ஆனால் கிராமங்களுக்குக் குழி வெட்டப்படுகிறது. நம் கண் எதிரே ராஜீவ் கும்பல் அதைச் செய்து கொண்டிருக்கிறது. நாம் என்ன ஊமைச் சாட்சிகளா, சும்மா இருக்க? ●



படிப்பகம்

www.padippakam.com

## மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்

# இந்திய-சீன எல்லைத் தகராறு

இந்த மாதம் (டிசம்பர்) இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சீனாவுக்குப் போகிறார். 34 ஆண்டுகளுக்குப்பிறகு இந்திய அரசின் உயர்தலைவர் ஒருவர் இப்போது தான் சீனாவுக்குப் போகிறார். நீண்டகாலமாகத் தீராது இருக்கும் இந்திய—சீனப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க இருக்கிறார்கள். ''இந்தியப் பிரதேசங்களை விட்டுக்கொடுத்து சமரசம் செய்து கொள்ளும் பேச்சுக்கே இடமில்லை'', ''சீனத் தலைமையின் போக்குகளில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன''—என்று தனது சீனப் பயணம் குறித்து கேள்விகள் கேட்கும் நிருபர்களிடம் ராஜீவ் கூறியுள்ளார்.

இந்திய—சீன எல்லைத் தகராறு; திபேத்தில் இந்தியத் தலையீடு—ஆகிய இரண்டு பிரச்சினைகள் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகாலப் பகைமைக்கு முக்கிய காரணங்களாகும். குறிப்பாக 1962 இந்திய—சீனப்போர். அதிலே இந்தியா அடைந்த வெட்கக்கேடான — கேலிக்குரிய தோல்வி — இந்திய மக்கள் மத்தியிலே சீனத்துக்கு எதிராக ஆழமான, பகையுணர்வைத் தூண்டுவதற்குக் காரணமாக அமைந்தது.


''கம்யூனிச சீனத்தை முதன் முதலாக அங்கீகரித்த நாடுகளில் ஒன்று-இந்தியா. ஐக்கிய நாடுகள் சபையில் ரத்து (வீட்டோ) அதிகாரம் உட்பட சீனாவின் நியாயமான உரிமை—பிரதிநிதித்துவத்துக்காக வாதிட்ட நாடுகளில் ஒன்று—இந்தியா. பாண்டுங் மாநாட்டில் கலந்து கொண்டு சீனாவுடன் சேர்ந்து அனாக்கிரமிப்பு உட்பட பஞ்சசீலக் கொள்கைகளை வகுத்துக் கையொப்பமிட்ட நாடுகளில் ஒன்று—இந்தியா. திபேத்தை சீனத்தின் ஒரு பகுதியாக அங்கீகரித்த நாடுகளில் ஒன்று—இந்தியா. அப்படி இருக்கும்போது இந்திய மண்ணின்மீது. பேராசை கொண்டு ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து நம்பிக்கை துரோகம் செய்துவிட்டது, சீனா''—இவை கம்யூனிச சீனத்துக்கு எதிராக அதிகார பூர்வமாக இந்திய அரசு செய்து வந்த-செய்து வரும் பிரச்சாரங்களாகும்.

''சீனர்கள் காட்டுமிராண்டிகள். பாம்பு, பல்லி தின்னும் அநாகரிக மனிதர்கள். நம்பியவர்களையே கழுத்தறுக்கும் துரோகிகள். பிரதமர் நேரு சீனர்களின் நயவஞ்சகத்தைப் புரிந்து கொள்ளாது, வெள்ளை மனதோடு நடந்து கொண்டார். அவரை சீனர்கள் நரித்தனமாக ஏமாற்றி விட்டார்கள்''—இவை இந்தியப் பத்திரிக்கைகள், வானொலி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் செய்து வந்த—செய்து வரும் பிரச்சாரங்கள். இரத்த திலகம், பிரேம் புஜாரி போன்ற சீன எதிர்ப்பு சினிமாக்கள் விரிவான அளவில் இந்தப் பிரச்சாரங்களைத் நடத்தின.

இந்திய—சீன எல்லைத் தகராறும், திபேத்தியப் பிரச்சினையும் உக்கிரமாக இருந்த போதும், குறிப்பாக இந்திய—சீனப் போருக்குப் பிந்திய ஆண்டுகளிலும் தேசிய வெறி உச்சத்திலிருந்தது. இவை பற்றிய பல உண்மைகள் மறைக்கப்பட்டு, சீனாவுக்கு எதிரான அவதூறுப் பிரச்சாரம் மட்டும் நடந்தது. உண்மைகள் எடுத்துச் சொல்லத் துணிந்தவர்கள் மட்டுமல்ல; யதார்த்தபூர்வமாகப் பரிசீலிக்கக் கோரியவர்கள்கூட தேசத்துரோகிகள் என்று குற்றஞ்சாட்டப்பட்டனர். இந்திய அரசின் தவறான நிலைப்பாடுகளையோ, இந்திய—சீனப் போரைத் தூண்டுவதற்காக இந்திய இராணுவம் மேற்கொண்ட ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளையோ எதிர்க்கத் துணியாத போலிக் கம்யூனிஸ்டுகளான ராமமூர்த்தி, நம்பூதிரிபாடு கும்பல். ''இரண்டு நாட்டு ஆட்சியாளர்கள் உயர்மட்டத்தில் கூடி, அரசியல் முறையில் தீர்வு காண முயல வேண்டும்'' என்று தீர்மானம் போட்டது. அதற்கே அவர்கள் தேசியப் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிப்பதாகக் கூறி பலமாதங்கள் சிறையிலடைக்கப்பட்டனர்.

அப்போதும், அதன்பிறகும் இதுவரை இந்திய மக்களிடையே இருந்து உண்மைகள் மறைக்கப்பட்டுவிட்டன. ஆனாலும் நாட்டின் மிகமிக சிலரே படிக்கும் ஆங்கில ஏடுகளிலும் ஓரிரு ஆங்கில நூல்களிலும் உண்மைத் தகவல்கள் வெளிவரத் துவங்கின. இந்திய அரசு அதிகாரிகளும், இராணுவத் தளபதிகளுமே அன்றைய பிரதமர் நேரு, இராணுவமந்திரிகிருஷ்ண மேனன் போன்றவர்களின் இமாலயத் தவறுகளை அம்பலப்படுத்தினர். இருந்த போதும் அவை பரவலாக இந்திய மக்கள் அறியாதவை. இந்திய—சீனப் பிரச்சினைகள் முன்னுக்கு வரும் போதெல்லாம் சீனத்துக்கு எதிரான பொய்களும் அவதூறுகளுமே பிரச்சாரம் செய்யப்படுகிறது.

இப்போது, சீனாவில் மாவோ மறைவுக்குப் பிறகு போலிக் கம்யூனிஸ்டுகளான டெங் சியாவோபிங் கும்பல் ஆட்சியைக்கைப் பற்றி, முதலாளித்துவ ஆட்சியை நிறுவியுள்ளது. மாவோ தலைமையிலான சீனத்தின் சோசலிசக்






படிப்பகம்

www.padippakam.com

கொள்கைகள் அனைத்தையும் எதிர்க்கும்—நிராகரிக்கும் டெங் சியாவோ பிங் கும்பல், ராஜீவுடன் நடத்தும் பேரத்தில் ஒரு சமரசத்துக்கு வரலாம். அந்த அடிப்படையில் இந்திய—சீனத் தகராறுகளுக்கு மாவோ மீது அவதூறு செய்யலாம். அல்லது முதலாளித்துவத்தை மீட்டுள்ள டெங்சியாவோபிங் கும்பல் தானும் தேசிய வெறியுடன் பிரச்சினையை அணுகலாம்.

டெங்— ராஜீவ் பேச்சு வார்த்தையின் முடிவு எதுவானாலும் வரலாற்று உண்மைகளை அது மாற்றிவிட முடியாது. வேண்டுமானால் திரித்துச் சொல்லலாம். எனவே இந்திய—சீன பிரச்சினைகளின் உண்மைகளை சொல்லியாக வேண்டும். அதற்காக இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

தேசிய வெறிஎன்பது வேறு. தேச பக்தி என்பது வேறு. நேரு காலத்திலிருந்து ஆளும் கும்பல் பின்பற்றும் "அகண்ட பாரதம்" என்கிற விஸ்தரிப்பு— ஆக்கிரமிப்புக் கொள்கை தேசிய வெறி அடிப்படையிலானது. அண்டை நாடுகளுடன் தீராத பகையும், போர்களையும் தூண்டி நாட்டையும் மக்களையும் தனது சுயநல—ஆதிக்க நோக்கங்களுக்குப் பலியிடுவதாகும். சுதந்திரமும், விடுதலையும் உடைய தேசத்தை உருவாக்கிக் கட்டிக் காப்பதும், முன்னேற்றுவதும்தான் தேச பக்தி. ஏகாதிபத்திய ஆதிக்கம் ஆக்கிரமிப்பை எதிர்க்கும் அதே சமயம் அண்டைநாடுகளுடனான நியாயபூர்வமான, யதார்த்த பூர்வமான சமாதான உறவு கொள்ளும் அணுகுமுறைதான் தேசபக்தியாகும். எனவே இந்தக் கட்டுரையில் காணப்படும் கருத்துக்களை ஆதாரங்களின் அடிப்படையில் யதார்த்த பூர்வமாக, நியாய பூர்வமாக பரிசீலிக்க வேண்டும்; தேசிய வெறி கண்ணோட்டத்தில் இருந்து பார்த்து நிராகரித்துவிடக்கூடாது என்று கோருகிறோம்.


ஆங்கிலேயக் காலனியவாதிகள் உருவாக்கிஒட்ட வைத்து விட்டுப் போன தீராத நோய்களில் ஒன்று இந்திய—சீன எல்லைப் பிரச்சினை. நோயைத் தீர்ப்பதற்குப் பதில் அலட்சியம், தவறான சிகிச்சை ஆகியவை மூலம் மேலும் முற்றச் செய்தது, நேரு அரசு.

1947—62 ஆண்டுகளில் "சுதந்திர", இந்திய அரசு வெளியிட்டுள்ள தேச வரை படங்கள் இந்திய—சீன எல்லையைப் பின் வருமாறு காட்டுகிறது:

பூடானிலிருந்து இமய மலையின் முகடுகளில் கிழக்கு நோக்கி ஓடும் வடகிழக்கு இந்திய எல்லை "வரையறுக்கப்படவில்லை" என்றுள்ளது. காஷ்மீரின் வடமேற்கே தொடங்கி நேபாளம்—திபேத்—இந்தியா ஆகிய மூன்று தேச சந்திப்பில் முடிவுறும் வடக்கு எல்லையின் மேற்கு பிராந்தியம் மற்றும் மத்திய பிராந்தியம் வெறுமனே வண்ணம் (கலர்) தீட்டப்பட்டிருக்கிறது. அதன் மீது "தெளிவுபடுத்தப்படாத எல்லை" என்று மூன்று இடங்களில் சங்கிலித் தொடர்போல அச்சிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் இந்தியஅரசாங்கத்தின் வெளிவிவகார மற்றும் அரசியல் இலாகாவின் அதிகார பூர்வமான வெளியீடு "அயிட்சிசனுடைய அறிக்கைகள்" என்றழைக்கப்படுவது — பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிடுகிறது: "காஷ்மீர் அரசின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லை இன்னமும் தெளிவு படுத்தப்படவில்லை (தொகுதி 12 பகுதி , பக் 5. 1931)

காஷ்மீர் பிராந்திய எல்லை தெளிவுபடுத்தப்படாமல் இருப்பது குறித்து அப்போது இந்தியர் எவருமே அக்கறைப்படவில்லை. காஷ்மீரின் ஒரு பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது;ஐக்கியநாடுகள் சபையின் மேற்பார்வையில் காஷ்மீரின் எதிர்காலம் குறித்து ஒரு வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று இந்திய அரசு அதிகார பூர்வமாக அவ்வப்போது அறிவித்து வந்தது. 1957இல்கூட இதுதான் இந்தியா பாகிஸ்தான் அரசுகளின் நிலை. "சுதந்திரமான, நியாயமான கருத்து—வாக்கெடுப்பு என்கிற ஜனநாயக முறையின் மூலம் காஷ்மீர் மாநில மக்களின் முடிவுக்கேற்ப காஷ்மீர் மாநில எதிர்கால அந்தஸ்து தீர்மானிக்கப்படும். இவ்வாறு 1948 ஜன. 17 அன்று ஐ. நா பாதுகாப்பு கவுன்சில் நிறைவேற்றிய தீர்மானங்கள், 1948 ஆக.13 அன்றும் 1949 ஜன 5 அன்றும் இந்திய—பாகிஸ்தான் பற்றிய ஐ.நா. கமிஷன் நிறைவேற்றிய தீர்மானங்கள் கூறுகின்றன." இவற்றை



சமாதான போதனையா? தேசிய வெறியூட்டலா?— ராணுவசிப்பாய்களுடன் நேரு

இந்திய—பாகிஸ்தான் அரசுகள் இப்போதும் ஏற்று அங்கீகரிக்கின்றன என்று 1957 டிசம்பர் 2ந் தேதி ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் கூறுகிறது.

காஷ்மீர் மக்களிடையே கருத்து-வாக்கெடுப்பு அடிப்படையில் காஷ்மீர் மாநிலத்தின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என்பதை ஏற்றுக் கொண்டதால் காஷ்மீர் மாநிலத்தின் சீன எல்லை குறித்து இந்தியா அக்கறை கொள்ளாமல்இருந்தது. (பிறகு, காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி ஆகிவிட்டது. கருத்து வாக்கெடுப்புக்கு இடமே இல்லை என்று தனது நிலைமை இந்தியா மாற்றிக் கொண்டது) காஷ்மீர் விவகாரம் தீர்மானிக்கப்படவேண்டி இருந்ததால்தான் 1954 அக்டோபரில் நேரு பீகிங் போனபோதோ, 1956—57இல்



படிப்பகம்

www.padippakam.com

சௌஎன்லாய் இந்தியா வந்த போதோ காஷ்மீர்—சீனஎல்லைப் பிரச்சினை குறித்து நேரு பிரச்சினையை எழுப்பிடவே இல்லை.

1930 ஆம் ஆண்டுகளில் இருந்து சீனா அதிகார பூர்வமாக வெளியிட்ட தேச வரைபடங்கள் காஷ்மீரின் வடக்கு எல்லைகளாக காரகோரம் மலைகளைக் காட்டுகின்றன. 1958 வரை இதை எவ்வித சிரத்தையோடும் இந்திய அரசாங்கம் எதிர்க்க வில்லை. 1946—49 ஆண்டு களில் சியாங்—கே—ஷேக்கின் கோமிங்டானுக்கும் கம்யூனிஸ்டு களின் செஞ்சேனைக்கும் இடை யில் உள்நாட்டுப் போர் கடுமையாக நடந்து கொண்டிருந் தது. அப்போதும் 1946—இல் புது டில்லியில் நடந்த ஆசிய நாடுகளுக்கிடையிலான உறவு பற்றிய மாநாட்டிற்கு வந்திருந்த சீனப் பிரதிநிதிகள், திபேத்தை சீனாவிற்கு வெளியே காட்டும் வரைபடத்தை எதிர்த்தார்கள். உடனே அதை இந்திய அரசு சீன அரசு இந்த ஒப்பந்தத்தை ஏற்கவில்லையாதலால் கை யொப்பமிடவில்லை. இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கும் திபேத்துக்கும் இடையிலான நடைமுறை சம்பந்தமுடையது தான்; என்றாலும் சீனஅரசாங்கத் தின் அதிகாரபூர்வமான கை யொப்பம் இல்லை. எனவே பிரச்சினை தீரவில்லை. அப்படியே இருந்தது. திபேத் ஒரு சுயாட்சி நாடாக நடத்தப்பட்டது. சீனாவுடன் நிலவிய அதன் உறவை சீனா ஏற்கவில்லை.''

ஆக, நேருவின் ஒப்புதல் படியே பிரிட்டிஷ் அரசுக்கும் திபேத்துக்கும் இடையில்ஏற்பட்ட தாகக் கூறப்படும் சிம்லா ஒப் பந்தத்தை—பூடானிலிருந்துஇமய மலை முகட்டின்மீது கிழக்காக வரையப்பட்டுள்ள மக்மகோன் எல்லைகோடுதான் இந்திய—சீன எல்லைக்கோடு என்பதற்கு ஆதாரமாக இந்தியா குறிப்பிடும் இந்த சிம்லா ஒப்பந்தத்தை —சீன அரசு ஒருபோதும் ஏற்றுக் கொண்டதே இல்லை. உண்மை

> மக்மகோன் எல்லைக்கோடுதான் இந்திய—சீன எல்லைக் கோடு என்பதற்கு ஆதாரமாக சிம்லா ஒப்பந்தத்தை இந்திய அரசு குறிப்பிடுகிறது. ஆனால் 1950, பிப்ரவரி 20 அன்று திபேத் பிரச்சினை பற்றி நாடாளுமன்றத்தில் பேசும்போது சிம்லா ஒப்பந்தத்தை சீனா அரசு ஒருபோதும் ஏற்றுக் கொண்டதேயில்லை என நேருவே ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்

விலக்கிக் கொண்டது.

காஷ்மீர் — சீன எல்லை எப்படி வரையறுக்கப்படாமல் இருந்ததோ, அதேபோல வட கிழக்கு எல்லையும் தொடர்ந்து பிரச்சினைக்குரியதாகவேஇருந்து வந்தது. இரு தரப்பும் ஏற்றுக் கொண்ட எல்லை ஒரு போதும் இருந்ததே இல்லை. இதற்கும் பல ஆதாரங்கள் உண்டு.

1950, பிப்ரவரி 20 அன்று, திபேத்தின் சர்வதேச அந்தஸ்து பற்றிப் பேசும்போது நாடாளு மன்றத்தில் பின் வருமாறு நேரு குறிப்பிட்டார், ''இந்த நூற்றாண் டின் ஆரம்ப ஆண்டுகளில், இந்தியா,சீனா மற்றும் திபேத்திய அரசாங்கங்களின் பிரதிநிதிகளுக் கிடையே சிம்லாவில் ஒரு மாநாடு நடந்தது. அதில் சில முடிவுகள் எட்டப்பட்டன. மக் மகோன் எல்லைக் கோடு எனப்படும் இந்திய—திபேத்திய எல்லை; திபேத் ஒரு சுயாட்சி நாடாக நடத்தப்பட வேண்டும்; இதை ஏற்கும்பட்சத்தில்சீனாவை ஒரு சுயாதிபத்திய—இறைமை யுடைய நாடாக அங்கீகரிப்பது ஆகியவை பற்றி விவாதிக்கப் பட்டது என்று கூறலாம். இது அவர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஆனால் அப்போதைய யில் திபேத்திய அரசும் இதை ஏற்றுக் கொண்டதில்லை என்பதற்கும் ஆதாரங்கள் பல உண்டு.

''சிக்கிம், டார்ஜிலிங், பூடான் உட்பட கிழக்கே அசாமிலிருந்து வடக்கே லடாக் வரையிலான திபேத்திய பிராந்தி யங்களைத் திருப்பிக் கொடுக்க வும்'' என்று 1947 அக் 16 அன்று திபேத்திய அரசாங்கம் இந்திய அரசுக்கு ஒரு தந்தி அனுப்பியது. ''மக்மகோன் எல்லைக்கோட்டிற் குத் தெற்கே உள்ள சீன பிராந்தியங்களை சிறுக சிறுக ஆக்கிரமிப்பதாக'' 1946லிருந்து 1947 வரை பிரிட்டிஷ் இந்திய அரசுக்கு எதிராக கம்யூனிஸ்டு கள் தலைமையில் இருந்த போட்டி அரசு நான்கு புகார் குறிப்புகளை அனுப்பிஇருக்கிறது. 1947 பிப்ரவரியில் இதே புகாரை கோமிங்டான் அரசு கொடுத்துள்ளது. செல்லுபடி யாகக் கூடியது என்று இந்திய அரசு கூறிவரும் சிம்லா ஒப்பந்தத்தை முற்றாக நிரா கரித்து 1949, நவ. 18 அன்று கோமிங்டான் அரசு இந்திய வெளி விவகார அமைச்சகத் துக்குப் புகார் குறிப்பு அனுப்பி யது.

இந்தியப் பொது மக்கள் பார்வைக்கு அனுமதி மறுக்கப் பட்டு இரகசியமாக வைக்கப் பட்டுள்ள இவைதான் பிரிட்டிஷ் காலனிய அரசிடமிருந்து ''சுதந் திர'' இந்திய அரசு பெற்ற சீதனம்.

''இந்திராவே இந்தியா'' என்று அவசர நிலையின்போது முழக்க மிட்டுப் பிரபலமான தேவகாந்த பரூவா, 1950 மார்ச்சு 17 அன்று இந்திய நாடாளுமன்றத்தில் சில தகவல்களைச்சொன்னார். ''வட கிழக்கு பிராந்திய மலைவாழ் மக்களிடம் திபேத்திய அதிகாரி கள் கட்டாய வசூல் செய்கிறார் கள். அங்குள்ள தாவாங் புத்தமடத்திற்கு ஆண்டுக்கு 5000 ரூபாய் அசாம் அரசாங்கம் நிதி யளிக்கிறது; அது திபேத்திய நிர்வாகத்தின் கீழுள்ள மடம். அந்த நிதியிலிருந்து பெரும்பகுதி திபேத்தின் தலைநகரான



சீனப் பிரதமர் சூ என் லாயுடன் நேரு - இந்திரா [1954ல்]

லாசாவில் திரேபுங் புத்தமடத் திற்கு அனுப்பப்படுகிறது''— என்றார் பரூவா. அதாவது 1914 சிம்லா ஒப்பந்தத்தை திபேத்தியர்கள் கடைப்பிடிக்க வில்லை. பூட்டானுக்குக் கிழக்கே தாவாங் பகுதியில் தொடர்ந்து அதிகாரம் செலுத்தி வந்தனர்.

ஆக, வடக்கே காஷ்மீர்— திபேத் (சீனா) ஆகியவற்றுக் கிடையிலும் வடகிழக்கேயும், இந்தியா—சீனா ஆகிய இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தெளிவான, வரையறுக்கப்பட்ட எல்லை ஒரு போதும் இருந்ததே இல்லை. இந்திய அரசின் அதிகாரபூர்வ நிலைப்பாடும் ஆரம்பத்தில் இதுதான். இந்த யதார்த்தத்தின் அடிப்படை யில் இந்திய—சீன எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காண் பதற்குப்பதில் இந்திய ஆளும் கும்பல் ஒருதலைப்பட்சமாக உரிமை பாராட்டிபிரச்சினையைச் சிக்கலாக்கியது; பிறகு பகை யானதாக மாற்றியது என்பதே உண்மை.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்திய நிறுவனத்துக்கு ஏராளமான நஷ்டஈடு! இந்திய பங்குதாரர்களுக்கு பட்டை நாமம்!

# போலிகளின் புதிய 'புரட்சி!'

'மார்க்சிஸ்ட்' கட்சியின் 13 வது தமிழ் மாநில மாநாடு, நவம்பர் 23—26 தேதிகளில் சென்னையில் நடந்து முடிந்தது. அதற்காக அக்கட்சியின் அணிகள், அல்லும் பகலும் தங்கள் கட்சியின் இலட்சியங்களாக பல முழக்கங்களை சுவரெழுத்துக்களில் வடித்தனர். "பெரு முதலாளித்துவ—நிலப்பிரபுத்துவ—அன்னிய சுரண்டலை ஒழித்திட மார்க்சிஸ்ட் கட்சியின்கீழ் அணி திரளுங்கள்" என அழகழகாக எழுதி மக்களை அறைகூவி அழைத்தனர். பாவம்! இக்கொள்கை இலட்சியங்களுக்கும் அக்கட்சிக்கும் எந்த ஒரு சம்பந்தமுமில்லை என்பதை அவர்கள், கண்ணிருந்தும் காண மறுக்கிறார்கள்.

என்ன விலை கொடுத்தேனும் ஏகாதிபத்திய நிறுவனங்களை அரவணைத்துக் கொள்வது, நிலப்பிரபுத்துவ அடிமைத்தனம் மூட நம்பிக்கைகளுக்கு வக்காலத்து வாங்குவது, முதலாளிகளுக்கு முற்போக்கு முத்திரைக் குத்தி அவர்களுடன் கூடி கூலாவுவது—இவைதான் அக்கட்சியின் கொள்கை இலட்சியங்கள்எல்லாம். மே.வங்க மாநிலத்தில் இதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறது, போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் தலைமை.

'கல்கத்தா ட்ராம்வேஸ் கம்பெனி, ஏறக்குறைய நூறாண்டு காலம் (1880—1976) கல்கத்தா நகரின் பயணிகள் போக்குவரத்தில் ஏகபோக ஆதிக்கம் செலுத்திய பிரிட்டிஷ் கம்பெனி. 1967ல் மே.வங்கத்தில் ஆட்சிக்கு வந்த போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் தலைமையிலான இடதுசாரி கூட்டரசாங்கம், 'ட்ராம்வேஸ்' நிறுவனத்தை அரசுடைமை ஆக்கப் போவதாக அறிவிப்புக் கொடுத்தது. ஆனால் 76ஆம் ஆண்டுவரை அவ்வறிவிப்பு அமுலுக்கு வரவில்லை.

இதற்கிடையில் மே.வங்கத்தின் ஆட்சியை கைப்பற்றிய காங்கிரசு அரசாங்கம், மீண்டும் 77ல் ஆட்சியைப் பிடிக்க, போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் நீண்ட நாள் வாக்குறுதியை, நொடியில்தானே நிறைவேற்றி காட்டியது. '76ம் ஆண்டு இறுதியில் காங்கிரசு அரசாங்கம் ட்ராம்வேஸ் நிறுவனத்தை அரசுடமையாக்கியது. அதற்கு ஈடாக, அக்கம்பெனியின் உள்நாட்டு பங்குதாரர்களுக்குச் (வெளிநாட்டு பங்குதாரர்களுக்கு அல்ல) சேர வேண்டிய பங்குத் தொகைகளுக்காகவும்அதன் கடன்தாரர்களுக்காகவும் என ரூபாய் 2.18 கோடியை நீதிமன்றத்தில் ஒப்படைத்தது.

'77ம் ஆண்டு தேர்தலில் போலிக்கம்யூனிஸ்ட்டுகளின் தலைமை ஆட்சியைப் பிடித்தது. கம்பெனியை அரசுடமையாக்கியதற்கு எதிராக நட்டஈடு கோரி ஏற்கனவே மே வங்க அரசின் மீது வழக்குத் தொடுத்திருந்த 'ட்ராம்வேஸ்' நிர்வாகம், ஆட்சிக்கு வந்த போலிக் கம்யூனிஸ்டுகளின் தலைமையை ரகசியமாக அணுகியது. அதற்காக தன்னுடைய பிரதிநிதியாக சரோஜ்போத்தார் என்பவரை தூது அனுப்பியது. சரோஜ் போத்தார் என்பவர், ஜோதிபாசுவின் நெருங்கிய கூட்டாளியும் ட்ராம்வேஸ் நிறுவனத்தின் இயக்குநர்களில் முதல் இந்தியருமான ஆனந்திலால் போத்தாரின் அக்கா மகனாவார்! எனவே இருவருக்குமான நட்புஇறுக்கமானது! ரகசியபேரம் சுறுசுறுப்படைந்தது.

மறுபுறம், எஸ்.கே. ஆச்சாரியா என்ற ஜோதிபாசுவின் குடும்ப நண்பர், ஜோதிபாசு முதன்மந்திரியானவுடன் மே.வங்க அரசின் சார்பில் ட்ராம்வேஸ் நிறுவனத்தின் நட்டஈடு கோரும் வழக்கில் ஆஜரானார்.

ஆக, மே.வங்க அரசுக்கும் ஏகாதிபத்திய நிறுவனத்துக்குமான வழக்கு, குடும்ப நண்பர்களுக்குள்ளான கொடுக்கல் வாங்கல் பிரச்சினையாக மாற்றப்பட்டு சுமூகமாக தீர்ப்பதற்கு உண்டான அனைத்து முயற்சியும் காதோடு காது வைத்தது போல் நடந்து முடிந்தது. இதற்கு வசதியாக,இவ்வழக்கை கோர்ட்டுக்கு வெளியே வைத்து தீர்த்துக் கொள்ள அரசு முன்வந்தது. '80 ஆண்டு மே மாதம் 12ந் தேதி, இதற்கான அனுமதியையும் நீதிமன்றத்திடமிருந்து அரசேமுன் முயற்சி எடுத்து ஒப்புதல் வாங்கியது. உடனே திரைமறைவு பேரங்கள் துவங்கியது.

கிடைத்த வாய்ப்பை நழுவ விடாத 'ட்ராம்வேஸ்' நிர்வாகம், புது தலைப்புகளின் கீழ் நட்டஈட்டுத் தொகையை ஏறக்குறைய ஏழு மடங்காக உயர்த்திகோரியது. ட்ராம்வேஸ் நிறுவனத்தின் அனைத்து பங்குதாரர்களுக்கும், கடன்தாரர்களுக்கும் பிரித்துக் கொடுக்க நீதிமன்றத்தில்மே.வங்க அரசு ஒப்படைத்திருந்த 2.18 கோடி ரூபாய்க்கு தானே முழு உரிமை கோரியதோடு, '76ஆம் ஆண்டிலேயே அரசு இப்பணத்

## போலிகளின் புதிய 'தோழர்'

போலிக் கம்யூனிஸ்டுகளின் குருபீடமான ரஷியா, இராமாயண மகாபாரதங்களை — பழம் பிற்போக்கு புராண இதிகாசங்களை தலையில் வைத்துக் கூத்தாடுகிறது. கீரழிந்த சீனாவோ பகவத் கீதையை அச்சிட்டுப் பரப்புகிறது. இதையெல்லாம் பார்த்த போலிகள் சும்மாயிருப்பார்களா? மதம் மக்களுக்கு அபினைப் போன்றது என்ற மார்க்சிய அரிச்சுவடியைத் தூக்கியெறிந்து விட்டு இந்து மதச் சீர்திருத்தவாதி விவேகானந்தரை தங்கள் பங்குக்கு ஆராதிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

"சுவாமி விவேகானந்தர் ஒரு தேசியவாதி. சுவாமியின் சமூகக் கடமை புரட்சி எழுச்சியுடன் பிணைந்திருந்தது. அவருக்கு நாட்டு நலன் என்பது மக்கள் நலன்தான். ரஷிய—சீனப் புரட்சிகளுக்கு நீண்ட நாட்களுக்கு முன்பே சூத்திரர்களின் விடுதலை எழுச்சியை தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்தார். ஏழைகளின் விடுதலையே அவரது வாழ்வின் உயரிய லட்சியமாக இருந்தது. அதற்காகவே அவர் வெளி நாடு சென்றார். அவர் தன்னை ஒரு சோசலிஸ்ட் என்று பெருமையுடன் அழைத்துக் கொண்டார். ஆனால் அவரது சோசலிசம் இன்றைய விஞ்ஞான சோசலிசத்திலிருந்து மாறுபட்டது"—'சுவாமி' விவேகாந்தரின் 125வது பிறந்தநாள் விழாவாம்! மே. வங்க 'இடது கம்யூனிஸ்ட்' பத்திரிக்கை "ஜனசக்தி" ஒரு பெரிய நடுப்பக்கக் கட்டுரை எழுதி இப்படி புகழாரம் சூட்டியுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு பாலாக் பிரம்மச்சாரியின் 'சனாதன தள'த்தை எங்கள் நண்பர்கள் என்று உச்சி முகர்ந்தார் மே. வங்க 'மார்க்சிஸ்ட்' கட்சி செயலாளர் சரோஜ் முகர்ஜி. இன்று விவேகானந்தருக்கு துதிபாடுகிறார்கள். போகிற போக்கைப் பார்த்தால் நாளை சங்கராச்சாரியையும் 'முற்போக்கு' என்று அரிய கண்டுபிடிப்பு செய்து 'தோழர் சங்கராச்சாரி'யாக போலிக்கம்யூனிஸ்டுகள் அரவணைத்துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



படிப்பகம்

www.padippakam.com

தை தமக்கு ஒப்படைக்க தவறிய தற்காக, 4 ஆண்டு கால வட்டி யாகவும், அக்காலத்திற்குள் ஏற் பட்ட பணத்தின் மதிப்பு குறைந்த ததை சமன்படுத்தவும் என, மேலும் 2.5 கோடி ரூபாய் தர வேண்டும் என கோரிக்கை வைத் தது. இப்பகற் கொள்ளையை கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக் கொண்டது ஜோதிபாசு தலைமை யிலான அவரது விசுவாசக் கும் பல். ஒரு பிரிவு அதிகார வர்க்கம் இப்பகற் கொள்ளைக்கு ஒத்து ழைக்க மறுத்தது. எனவே,அவசர அவசரமாக 'ட்ராம்வேஸ்' நிர்வா கத்திடமிருந்து சிறிது பகற் கொள்ளை குறைவான மேலும் இரண்டு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் ஒன்றுக்கு உடனடியாக ஒப்புதல் அளித்தது. மே.வங்க அரசாங்கம்.

ஏற்றுக் கொண்ட கோரிக்கை யின்படி நீதிமன்றத்தில் மே.வங்க அரசு போட்டிருக்கும் 2.18 கோடி ரூபாய் கீழ்கண்ட வகையில் பிரிக் கப்பட்டது. மே.வங்க அரசுக்கு 86 லட்சம் (ட்ராம்வேஸ் நிறுவ னத்திற்கு இருந்த கடனை அடைக்க) எடுத்துக் கொள்வது எனவும், 86 லட்சம் ரூபாயை ட்ராம்வேஸ் நிறுவனம் இங்கிலாந் திற்கு பவுன்களாக எடுத்து செல்ல அனுமதிப்பது எனவும், மீதி 46 லட்சம் ரூபாயை ட்ராம்வேஸ் நிறு வனத்தின் பெயரில், இந்தியாவில் இருக்கும் பன்னாட்டு வங்கியான 'சிட்டி' வங்கியில் போடுவது என வும் முடிவெடுக்கப்பட்டு அமுல் படுத்தப்பட்டது. இந்தியாவில் இருக்கும் ட்ராம்வேஸ் பங்குதாரர் களுக்கு சேர வேண்டிய தொகை களைக் கொடுக்க ட்ராம்வேஸ்நிறு வனம் 20 லட்ச ரூபாய்க்கு அதன் சார்பில் வங்கி உத்திரவாதத்தை அரசு வாங்கி வைத்துக்கொள்வது எனவும் முடிவானது.

இதில் வேடிக்கை என்ன வென்றால், 50 சதவிகித பங்கு களுக்கு சொந்தமான ட்ராம்வேஸ் நிறுவனத்துக்கு மே.வங்க அரசு தரும் நஷ்டஈடு 1.32 கோடி (86+46) ரூபாய். அதே அளவு 50 சதவிகித பங்கு வைத்துள்ள இந்தியர்களுக்கு மே.வங்க அரசு தருவதாக கூறும் நஷ்டஈடுவெறும் 20 லட்ச ரூபாய். அதுகூட இன்று வரை காகிதத்தில்தான் உள்ளது. இது மட்டுமல்ல, ட்ராம்வேஸ் நிறு வனம் முதலில் கோரிய வட்டி முத லான தொகை ரூபாய் 2.5 கோடி யை மே.வங்க அரசிடமிருந்து பெற இப்போது கல்கத்தா நீதி மன்றத்தில் தனியாக ஒருவழக்கும் தொடுத்துவிட்டது. இவ்வழக்கை யும், நீதிமன்றத்துக்கு வெளியே தீர்த்துக் கொள்வதாக மே.வங்க அரசு அறிவித்து, அதற்கும் ஒரு ரகசிய பேரம் நடந்து முடிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இவ்வளவு அதிகார அத்து மீறல்களையும் அரசு 2 மாதத்திற் குள்ளாக செய்து முடித்தது. கோர்ட்டுக்கு வெளியே இவ்வழக் கை '80ம் ஆண்டு மே மாதம் 12ந் தேதி அனுமதி வாங்கிய மே.வங்க அரசு முறைப்படி ரகசியபேரத்தை ஒரு வாரத்திற்குள் மே 19ந் தேதி ஆரம்பித்து '80 ஆண்டு ஜூலை 8ந் தேதிக்குள் அனைத்தையும் முடித்தது. இந்த இடைப்பட்ட நாட்களுக்குள் ட்ராம்வேஸ் நிறு வனத்திடமிருந்து 3 புதிய கோரிக் கைகளை பெற்று பரிசீலித்தது. இவ்வழக்கு சம்மந்தமான கோப்பு களில் ஒரே நாளில், பலதுறை உயர்மட்ட அதிகாரிகளின் கையெ ழுத்தும், பல்வேறு துறையின் மந் திரிகளின் கையெழுத்தும் வாங்கப் பட்டிருக்கிறது.

குறிப்பாக, '80ஆம் ஆண்டு மே 19ந் தேதி, ஜூலை 2ந்தேதி, ஜூலை 8ந் தேதி ஆகிய நாட் களில், அக்கோப்புகளில், பல உய

வரத்து துறையின் செயலர் டி. ருத்ரா மற்றும் அப்போதைய நிதிமந்திரி அசோக்மித்ராவின் கோப்புகள் மாயமாகமறைந்துவிட் டது. அதற்கு பதிலாக அவசர கோலத்தில் தயாரிக்கப்பட்ட சில கோப்புகள் வெளியில் வந்து சந்தி சிரிக்கிறது.

சாலை போக்குவரத்து துறை செயலர் கையொப்பம் இட வேண்டிய ஒரு கோப்பில், சாலை போக்குவரத்து மந்திரியின் உதவி யாளர் ஒருவர் கையொப்பமிட்டு அதுவும் ஆணையாகி இருக்கிறது. 'சுதந்திரத்திற்கு' பிந்தைய வர லாற்றில் இதுவரை இப்படியொரு அதிசயம் நடந்ததில்லை என அனைவரும் அதிசயித்துப் போகின்றனர். இவ்வாறு சாலை போக்குவரத்துதுறை மந்திரியின் உதவியாளர் டி. கே. மாரிக் என்ப வர் '81ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் 10ந் தேதி கையொப்பமிட்டுஅனுப் பிய கோப்பை மே.வங்க அரசின்




**இந்திய பங்குதாரர்களை ஏமாற்றிய கிரிமினல் குற்றவாளிகள்.**

ரதிகாரிகள், மந்திரிகளின் ஒப்புதல் கையெழுத்துக்கள் ஒரு சேர இருக் கின்றன. அட்வகேட் ஜெனரல், எஸ். கே. ஆச்சாரியா மற்றும் சாலைப் போக்குவரத்துத் துறை, நிதித்துறை, சட்டத்துறை, இலா காக்களின் செயலர்களின் ஒப்பு தல் கையெழுத்துகளும், அத்துறை மந்திரிகளான முகமது அமீன், அசிம் அப்துல் அலீம் ஆகியோர் களின் கையெழுத்தும் ஜோதிபாசு வின் ஒப்புதலும் ஒரே தேதியில் இருக்கின்றன.

வேறுஎந்த அரசுதுறை கோப் புகளிலும் இந்த அபூர்வத்தை காண முடியவில்லை. ராஜீவின் போபர்ஸ் பீரங்கி பேர கோப்புகள் பல காணாதுபோனது போலவே, இவ்வழக்கு சம்பந்தப்பட்ட சில கோப்புகளும் காணாமல் போய் விட்டன. குறிப்பாக இந்த ரகசிய பேரத்திற்கு எதிராக குறிப்பெழுதி கையொப்பமிட்ட சாலைப்போக்கு

அதிகாரபூர்வமான அறிவிப்பாக நீதிமன்றம் எடுத்துக் கொண்டு நடந்து முடிந்த ரகசிய பேரத்தை அங்கீகரித்து இருக்கிறது.

தன்னுடைய அரசியல், பொரு ளாதார, கிரிமினல் குற்றங்களை மூடிமறைக்க பாசிச ராஜீவ் கையா ளும், அனேக தந்திரங்களை, அச் சாக அப்படியே காப்பி அடித்து தப்பிக்க முயற்சிக்கிறார்கள், போலிக்கம்யூனிஸ்டுகள்- முயற்சித் தும் முடியவில்லை. ராஜீவ் மாதி ரியே மக்களிடம் அம்பலப்பட்டு அலங்கோலமாக நிற்கிறார்கள்.

வெளிச்சத்திற்கு வந்த மகன் சந்தன்பாசுவின் 'பல்பு' ஊழலை அணைக்கஅவசரமாககிளம்பி வந் தார் 'வங்கத்தின் சிங்கம்' ஜோதி பாசு. வந்த வேகத்தில் வழிதவறி ட்ராமில்சிக்குண்டு பரிசுத்த மேலா டை கிழிந்து அரசியல் அரங்கில் அரை நிர்வாணமாக நிற்கின்றார்!

-மாணிக்கவாசகம்.



படிப்பகம்

www.padippakam.com



# அப்பாவி இளைஞர் அநியாயமாககொலை!

போலீசைத் திருத்த முடியுமா? என்ற புதியஜனநாயகத்தின் கட்டுரைபடித்தோம். எளிமையான முறையில் புரியவைத்து, அடக்குமுறை எந்திரத்தின் ஒரு பகுதியான போலீசை அடித்து நொறுக்கவேண்டிய அவசியத்தை எடுப்பாக அம்பலப்படுத்தியிருந்தீர்கள். அவ்விதழின், மை உலரும் முன்பே எங்களூரில் நடந்த ஒரு சம்பவம் இது.

செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூர் அருகேயுள்ள செவ்வாய்ப்பேட்டை காவல் நிலையம். அக்டோபர் 15ந்தேதி அப்பகுதி மக்களால், அடித்து நொறுக்கப்பட்டு தீ வைக்கப்பட்டது. அவ்வூரைச் சேர்ந்த ஜெயராஜ் என்ற ஒரு அப்பாவியின் படுகொலைக்கு காரணமாயிருந்த எஸ்.ஐ நரசிம்மன் தலைமையிலான போலீசு கும்பலுக்கு தக்கமுறையில் பகுதி மக்கள் பாடம் புகட்டினார்கள்.

போலீசுக்கும்பலுக்கு விசுவாசமாக, பிழைப்புவாத மஞ்சள் பத்திரிக்கைகள் எல்லாம் செய்தியை திரித்து, நியாயத்தை நிலைநாட்டிய மக்கள் மீது அவதூறு சேற்றை அள்ளி வீசின. போலீசு தாக்கப்பட்டதற்கு தாரை தாரையாக கண்ணீர் வடித்தன.

உண்மையில் நடந்த சம்பவம் இதுதான்: வழக்கம்போல் அன்றும், சாராய சூதாட்ட வசூல் வேட்டைக்குகிளம்பியது போலீசு. வயிறுமுட்ட சாராயத்தை குடித்து விட்டு வசூல் வேட்டைக்கு சென்ற போலீசு கும்பலுக்கு, வசூல் வேட்டை போதிய அளவு கிடைக்கவில்லை. ஆத்திரம் அடைந்த போலீசு, வழியில் வழக்கமாக சீட்டாடும் இளைஞர் கும்பலை கண்டது. சூதாட்டக்காரர்களை பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல, அவர்களிடம் இருக்கும் பணத்தை பறிக்கும் வெறியுடன். 5 பேர் கொண்ட போலீசு கும்பல் காடுமேடெல்லாம் அவர்களை துரத்திக் கொண்டோடியது.

நவம்பர் மாதம் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டிருந்த, தகப்பனை இழந்த ஜெயராஜ் என்ற அப்பாவி இளைஞர், சீட்டாட்டக்காரர்களுடன்சேர்ந்திருந்ததால் அவரும்ஓட ஆரம்பித்தார். காரணம், கல்யாண செலவுக்கான பணம், 'வாட்சு, மோதிரம், செயின்' போன்ற விலையுயர்ந்த பொருட்களுடன் அவர் இருந்ததால், போலீசுக்கும்பல்சூதாட்டக்காரன் என்று முத்திரைக் குத்தி இதையெல்லாம் பிடுங்கிக் கொள்ளும் என்று ஓடினார்.

அவர் நினைத்த மாதிரியே நடந்தது! அவர் அணிந்து கொண்டிருந்த தங்க நகைகளை கண்ட போலீசு அவரை மட்டும் குறிவைத்து, துரத்தியது. கழனிக் காட்டில் வைத்து பிடித்து, சாராயம் சோதிக்கும் நீண்ட இரும்பு கம்பியால், அவருடைய ஆண் குறியைப் பார்த்து குத்தியது. ரத்தம் பீச்சியடிக்க, அலறி துடித்து அதேஇடத்தில் இறந்து போனார், அப்பாவி இளைஞர் ஜெயராஜ். போலீசு படுகொலையை கையும் களவுமாக கண்டார், மகாதேவன் என்ற இளைஞர். படுகொலை புரிந்த போலீசு கும்பல், பீதியடைந்து இரண்டு நாட்கள் தலைமறைவாகிவிட்டது.

செய்தியறிந்த, நாங்களும் உள்ளூர் அம்பேத்கார்மன்ற உறுப்பினர்களும், ஜனநாயக எண்ணம் கொண்ட ஊர்மக்களும் சேர்ந்து கொண்டு போலீசுக் கும்பலின் படுகொலைக்கு எதிராகவும், போலீசு நிலையம் தீ வைக்கப்பட்டதைக் காரணம் காட்டி குவிக்கப்பட்ட, ஆயிரக்கணக்கான போலீசை வாபசு பெறும்படியும், பொய் புகார்கள் கீழ் கைது செய்யப்பட்ட பகுதிமக்களை உடனடியாக விடுவிக்கும்படியும் தொடர்ந்து பிரச்சாரம் எடுத்தோம். ஓட்டுக்காக, மக்களிடம் வந்து நீலிக்கண்ணீர் வடித்துவிட்டு, போலீசுக்குப் பாராட்டுக் கேடயம் வழங்கிய, ஓட்டுப்பொறுக்கிகளை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தினோம்.

இவண்.
முற்போக்கு இளைஞர் அணி
(சமரன் பிரிவு)
செவ்வாய்ப்பேட்டை.

## ஓட்டுப்பொறுக்கிகளால் தொல்லை

பாசிசக் கோமாளிஎம்ஜிஆர் பத்தாண்டு ஆட்சியின் 'சாதனைக்கு' திருச்சி மாவட்டம் பெரம்பலூர் பேருந்து நிலையமும் இப்பகுதியின் சாலைகளும் சாட்சியாக உள்ளன. இச்சாலைகளை செப்பனிட இரண்டு,மூன்று முறை அரசுத் துறை ஒப்பந்தக்காரர்கள் ஏலம் எடுத்து, அப்பணத்தை எம்ஜிஆரின் ரத்தத்தின் ரத்தங்கள் ஏப்பம்விட்டனர். இதை எதிர்த்து போலிக் கம்யூனிஸ்டுகள் போஸ்டர் இயக்கமும், பொதுக் கூட்டங்களும் நடத்தினர். ஆனாலும் நிலைமை மாறவில்லை.

இந்நிலையில் ஓட்டுப் பொறுக்க திருச்சி மாவட்ட சுற்றுப் பயணம் வந்த பாசிச ராஜீவின்வருகையை ஒட்டி குண்டும் குழியுமாக இருந்த சாலையை அவசர அவசரமாக கருமணலைக் கொட்டி 'பாலீஷ்' செய்தனர். இதனால் சாலையில் வாகனங்கள் சென்றால் ஒரே தூசு மண்டலமாகக் கிளம்பும். மக்கள், மூக்கையும் வாயையும் பொத்திக் கொண்டுஓடவேண்டிய தாயிற்று. இதே நேரத்தில் மழை பெய்து சாலையை படுமோசமாக்கியது. கருமணல் கொட்டியதன் விளைவாக சாலை ஒரே சேறும் சகதியுமாக மாறி போக்குவரத்துக்கு இடையூறானது மட்டுமின்றி மக்கள் முழங்கால் அளவு சேற்றில் விழுந்துஎழுந்து நடக்கவேண்டிய அவல நிலை!

ராஜீவ் வருகையால் தமிழக மக்களுக்கு இரட்டிப்பு தொல்லை என்பதே நியதியாகிவிட்டது. ஓட்டுப் பொறுக்கிகளோ இதைக் கண்டு கொள்ளாமல் தேர்தலைக் குறி வைத்து நாயாய் அலைகின்றனர்: ஆனால் உழைக்கும் மக்களோ இவர்களுக்கு தக்க பாடம் புகட்ட தயாராகி வருகிறார்கள்.

முற்போக்கு இளைஞர் அணி
வாசகர் வட்டம் பெரம்பலூர்.



படிப்பகம்

www.padippakam.com



கிழக்கு மாகாணத் தேர்தல்: எண்ணெய் சட்டியிலிருந்து எரியும் அடுப்புக்கு!

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவர்களின் நலன்களை மறுக்கும் துரோகத்தனமான ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கி, ஈழப்போராளிகளைப் பிளவுபடுத்தி, அவர்களில் ஒரு பிரிவினருடன் பேரத்தை முடித்துக் கொண்டு ஒரு பொம்மையாட்சியை ஈழத்தில் நிறுவும் இந்திய—இலங்கை பாசிஸ்டுகளின் நோக்கம் ஒரு வழியாக நிறைவேறியுள்ளது. அதன்படியே ஈபிஆர்எல்எப் துரோகக் கும்பல் இந்திய இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டில் நடந்த போலித்தனமான ஈழத்தேர்தலில் 'வெற்றி' பெற்று பொம்மையாட்சியை அமைக்கும் தகுதியைப் பெற்று விட்டது!

1982ல் பாசிச இந்திரா ஆயிரக்கணக்கான மக்களைப் படுகொலை செய்து அசாமில் போலியான தேர்தலை நடத்திய போது, போலிக் கம்யூனிஸ்டுகள் எவ்வாறு வரிந்து கட்டிக் கொண்டு ஆதரித்தார்களோ அதேபோல இந்திய—இலங்கை பாசிச கும்பல்கள் ஈழத்தில் நடத்திய போலியான தேர்தலையும் விசுவாசத்தோடு ஆதரிக்கின்றனர். வெட்கமின்றி துரோகி பத்மனாபாவுக்கு வாழ்த்து தெரிவித்து இந்திய பாசிஸ்டுகளோடு போட்டி போட்டுக் கொண்டு விளம்பரம் செய்கின்றனர்.

## ஈழத் தேர்தல்:

## துரோகிகளின் வெற்றி

## ஜனநாயகத்தின் தோல்வி

இலங்கைத் தேர்தல்களில் இந்தியா தலையிடாது என்று ஆரம்பத்தில் புளுகினாலும் சகுனி தீட்சிதர் தலைமையில் இந்திய உளவுப்படை 'ரா' நேரடியாக பேரம் நடத்தி இந்தத் தேர்தல் மோசடியை அமுலாக்கியது. ஏற்கனவே ராஜீவ் ஜெயவர்த்தனே கும்பல் தீர்மானித்தபடியே வடக்கே யாழ் தீபகற்பத்தில் ஈபிஆர்எல்எப் துரோகக் கும்பல் போட்டியின்றி 'வெற்றி' பெற்றது.

வடக்கே தேர்தல் பணிகளைச் செய்ய அஞ்சி நடுங்கிய போது இந்தியஇராணுவ விமானம் மூலம் இலங்கை அதிகாரிகளைத் தூக்கி வந்து வேட்மனுத் தாக்கல் சடங்கு எவ்வாறு நடந்ததோ அவ்வாறே, கிழக்கிலும் தேர்தல்பணிகள் நடந்தன இந்திய விமானப் படையின் ஆறு விமானங்கள் மூலம் கொழும்பிலிருந்து அதிகாரிகளும் ஓட்டுப் பெட்டிகளும் வாக்குச் சீட்டுகளும் கொண்டு வரப்பட்டு இந்திய ராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டில் 'ஜனநாயக ரீதியில்' தேர்தல் நடந்து, ஈபிஆர்எல்எப் துரோகக்கும்பல் மொத்தத்தில் 54 இடங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளது.

"ஈபிஆர்எல்எப் பொடியன்கள் கையிலே துப்பாக்கிகளையும் வெடிகுண்டுகளையும் ஏந்திய படி ஓட்டு வேட்டையாடினர். வீதிகளிலும் அங்காடிகளிலும் நிர்ப்பந்தமாக தமது கொடியை மட்டுமே பறக்கவிடச் செய்தனர். தேர்தலைப் புறக்கணிக்கக் கோரிய புலிகளின் சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்தனர். தாங்களே வாக்காளர் அடையாள அட்டைகளை தமிழ் மக்களுக்கு விநியோகித்தனர்" என்று ராஜீவுக்குத் துதிபடும் 'தி டெலிகிராப்' நாளேட்டின் நிருபர்களே 'அமைதியாகவும் ஜனநாயக ரீதியிலும் நடந்த' இத்தேர்தலின் யோக்கியதையை அம்பலப்படுத்துகின்றனர்.

இந்த லட்சணத்தில் ஏறத்தாழ 60 சதவீதத்துக்கும் மேலாக வாக்குப் பதிவாகியுள்ளதைக் காட்டி ஈழத்தமிழ் மக்கள் இந்திய—இலங்கை துரோக உடன்பாட்டை முழுமையாக ஆதரிப்பதாக பாசிச ராஜீவ்கும்பலும், போலிக் கம்யூனிஸ்டுகளும் பசப்புகின்றனர். ஆனால் யாழ் தீபகற்பத்தை ஒப்பிடும் அளவுக்கு கிழக்கே இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான அரசியல் பிரச்சாரமும், கிளர்ச்சிகளும் நடத்தப்படாததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. புலிகளும், ஆக்கிரமிப்பை எதிர்க்கும் இதர போராளி குழுக்களும் இதில் உரிய கவனம் செலுத்தமல், ஈபிஆர்எல்எப் துரோக கும்பலுக்கு முன்முயற்சியை விட்டுக் கொடுக்கும் மாபெரும் தவறைச் செய்து விட்டனர். அதேசமயம் யாழ் தமிழர்களின் நீண்ட நாளைய ஆதிக்கமும் சாதிய வெறியும் ஒரு பகுதி மக்களை துரோகிகளின் பக்கம் தள்ளி விட்டுள்ளது.

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

நான்காமாண்டில் அடியெடுத்து வைத்துள்ள புதிய ஜனநாயகத்துக்குப் புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்த உங்களில் பலர், தங்களது நெடுநாளைய விருப்பப்படி இதழை வண்ணத்தில் கொண்டு வருமாறு கோரியிருந்தனர்.

ஒருபுறம் நட்டம் ஏற்பட்ட போதிலும், உங்களது விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் எளிமையாக ஒரு வண்ணம் மட்டும் கொண்டதாக [illegible] இதழிலிருந்து தொடர்ந்து வெளியிடத் தீர்மானித்துள்ளோம்.

உங்களது விருப்பம் நிறைவேறிய மகிழ்ச்சியில், உற்சாகத்தோடு விற்பனையை விரிவு படுத்துங்கள். புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்துங்கள். புதிய ஜனநாயகம் எனும் புரட்சித் தீப்பொறியை பெருங்காட்டுத் தீயாக திக்கெட்டும் பரவச் செய்யுங்கள்

தோழமையுடன்
ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

புலிகளும் இந்திய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் பிற போராளி குழுக்களும் வெறும் ஆயுதபலத்தில் மட்டும் தங்கியிருக்காமல், அரசியல் பிரச்சாரம்—கிளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு, துரோகிகளை அம்பலப் படுத்தி, மக்களை அணிதிரட்ட வேண்டிய பொறுப்பு மிக்க பணியில் தொடர்ந்து ஈடுபட வேண்டிய அவசியத்தை இத் தேர்தல் எதிர்மறையில் மீண்டும் உணர்த்தியுள்ளது.


மறுபுறம் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக சிங்கள மக்களின் போராட்டம் முன்னிலும் தீவிரமாகி வருகிறது. பாசிச ஜெயவர்த்தனேகும்பல் முற்றாகத்தனிமைப் பட்டுப் போயுள்ளது. மக்களது போராட்டப் புயலை அறுவடை செய்யும் நோக்கத்தோடு பிரேமதேசாவும், திருமதி பண்டாரநாயகாவும் தாங்கள்அடுத்து ஆட்சிக்கு வந்தால் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை ரத்து செய்யப் போவதாகவும் இந்திய ராணுவத்தை வெளியேற்றப் போவதாகவும் பகிரங்கமாக அறிவிக்கின்றனர். அடுத்து வரும் நாட்கள் மேலும் கொந்தளிப்பாக இருக்கும் என்பதை ஊகிக்கும் இந்திய பத்திரிக்கைகள் இனியும் இந்திய ராணுவம் ஈழமண்ணில் நீடிப்பது சிக்கலானது; தேர்தல் முடிந்தகையோடு திரும்பி விடுவது நல்லது என்று எச்சரிக்கின்றன.

ஆனால் பாசிச ராஜீவ்கும்பல் தனது ஆக்கிரமிப்பு வெறியைக் கைவிட்டு ஈழத்திலிருந்து ஒருக்காலும் திரும்பி விடாது. தேர்தல் முடிந்த பின்னரும்கூட ஒப்பந்தத்தை நிறைவேற்றும் வகையில் இந்திய ராணுவம் ஈழமண்ணில் நிலை கொண்டிருக்கும் என்றே அறிவித்துள்ளது. அதாவது ஒருபுறம் திட்டமிட்டே, உளவுப் படைகள் மூலம் சதிகளையும், ஆத்திர மூட்டல்களையும் இனக் கலவரங்களைத் தூண்டிவிட்டு போராட்ட சக்திகளை மேலும் பிளவுபடுத்தவும், மறுபுறம் பிரேமதேசா, பண்டாரநாயகா ஆகியோரிடம் இந்தியாவுக்குச் சாதகமான நிலை எடுக்க பேரம் பேசவும் பாசிச ராஜீவ்கும்பல்தொடர்ந்து முயற்சிக்கும். இந்நிலையில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வரும் புலிகளும், இதர போராளி குழுக்களும் ஈழமக்களின் இன விடுதலைக்கும் சுதந்திரத்துக்குமான தமது போராட்டத்தில் ஒன்றிணைவதும், இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக தமது போராட்டத்தை தீவிரப் படுத்தியுள்ள சிங்கள தேசிய சக்திகளுடன் ஐக்கியப்படுவதும் காலத்தின் கட்டாயமும் கடமையுமாகும்.

● மணி

# ஊழல் பரிசு!

கல்கத்தா நகரின் வர்த்தக மையமான ராடன் சதுக்கத்தில் உயர்ந்து நிற்கும் இக்கட்டிடம் மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசுவின் சீமந்த புத்திரன் சந்தன்பாசுவுக்கு சொந்தமானது. இக்கட்டிடம் கட்டுவதற்கான இடத்தை, கல்கத்தா நகர அரசு அபிவிருத்திக் கழகம், ஜோதிபாசு மகனுக்கு மலிவு



ஜோதிபாசுவின் மகன் சந்தன்பாசு எழுப்பும் மூன்றடுக்கு மாளிகை அரசு சலுகை, அதிகாரமுறைகேடு

விலையில் தாரை வார்த்துக் கொடுத்தது.

''மரத்தை அழிப்பது, மனிதனைக் கொல்வது போன்ற கிரிமினல் குற்றம்'' என்று தமிழகத்தின் நகரங்களில் சுவரெழுத்து எழுதும் போலிக் கம்யூனிஸ்ட்டுகள் கல்கத்தா நகரில் மட்டும், மக்களின் எதிர்ப்பையும் மீறி, நகருக்கு அழகுச் சேர்த்த சுற்றுச் சூழலைப் பாதுகாத்த தொன்மை வாய்ந்த ராடன் பூங்காவை அழித்தார்கள். அவ்விடத்தை முதலாளிகளுக்கு தேவையான சந்தை இடமாக சலுகை விலையில் மாற்றிக் கொடுத்தார்கள். அதில் தானும் தன் மகனுக்கு இரண்டாயிரம் சதுர அடி நிலத்தை வளைத்துப் 'போட்டுக் கொண்டார் வங்கத்தின் சங்கம் ஜோதிபாசு.

இந்த நவீன வடிவமைப்பு குடியிருப்பு பங்களாவை கட்டித் தரும் பொறுப்பை'எச்.கே. சென் அண்ட் கம்பெனி'என்ற கட்டிட கட்டுமான நிறுவனம் தத்து எடுததுக் கொண்டுள்ளது. இந் நிறுவனம் ஏற்கனவே, மேற்கு வங்க அரசு கட்டுமானப் பணிகளில் ஊழல் புரிந்து சந்தி சிரித்த நிறுவனம். ஆனால், இன்றளவும் இந்நிறுவனத்துக்குத்தான் கல்கத்தா நகரஅபிவிருத்திக்கழகமும் மாநகராட்சியும் தங்களது கட்டுமானப்பணிகள் அனைத்தையும் கொடுத்து வருகின்றன. அதற்கான கைமாறாகத்தான், முதலமைச்சர் மகன்சந்தன்பாசுவிற்கு இப்படி சகாயம் செய்கிறது எச்கே சென் நிறுவனம்.

நவீன படுக்கையறைகள், விருந்தினர் அறை, கண்கவர், உணவருந்தும் அறை, தாழ்வாரம், சமையல் அறை, குளியல் அறை என ஒவ்வொரு மாடியும் ஒரு பங்களா போன்று மூன்று பங்களாவை மூன்று மாடியில் ஒரு சேர அமைத்துக் கொடுக்கிறது, இந்நிறுவனம். வரவேற்பு அறை போன்ற முக்கியமான இடங்களிலெல்லாம் பளிங்கு கற்கள் பதித்த அலங்காரமான தரை, மூன்று மாடிக்கும் போய் வர வசதியாக 'லிப்ட்' வசதி இவ்வளவும் இந்த மாளிகையில் உண்டு!

பல லட்சம் ரூபாய் செலவில் பகட்டான பங்களா எழுப்பும் இந்த அரண்மனை சுகவாசி சந்தன்பாசுதான் தன்னிடம் வேலை செய்த தொழிலாளிகளின் 'பி.எப்' பணத்தையும் பகற் கொள்ளையடித்தவர். கிழக்கு இந்திய பிஸ்கட் கம்பெனி மற்றும் தன்னுடைய இன்னொரு 'சாக்லெட்' தயாரிப்பு கம்பெனிகளில் பணிபுரிந்த தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்துபிடித்தம் செய்த சேமநல நிதிகளைக்கூட திருப்பி தராமல் விழுங்கிவிட்டு, அக்கம்பெனிகளை இழுத்து மூடியவர்.

ஒரு ஆனந்த பவனை நாட்டுக்கு வழங்கிவிட்டு, நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் ஆனந்த வாழ்க்கைக்கான அடித்தளத்தையே பறித்துக் கொண்டது நேரு பரம்பரை! ஆனால் போலிக் கம்யூனிஸ்ட்டுகளோ கைமுதல் எதுவும் போடாமலே அரண்மனை சுகத்தை அனைத்தையும் அனுபவிக்கிறார்கள்!



படிப்பகம்

www.padippakam.com

# சாயம் போனாலும் சவடால் குறையவில்லை

சம்பள உயர்வு, போனஸ் உயர்வு ஆகிய கோரிக்கைகளை முன் வைத்து மதுரை—செல்லூர் கைத்தறி தொழிலாளர்கள் போராடி வருகின்றனர். இப் போராட்டத்திற்கு அனைத்து ஓட்டுச்சீட்டு அரசியல் கட்சிகளைச் சார்ந்த தொழிற் சங்கங்கள் தலைமை தாங்குகின்றன. இச்சங்கங்களின் கூட்டுத் தலைமையாக பொறுப்பில் உள்ள போலிக் கம்யூனிஸ்டுகளின் சி.ஐ.டி.யு சங்கத்தின் சார்பில் அய்யாவு என்பவர் தலைமை தாங்குகிறார். இவர் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்ட உணர்வுகளுக்கு சமாதி கட்டுவதில் கைதேர்ந்தவர் என்பது ஊரறிந்த விசயம்.

இத்தொழிற் சங்கங்களின் முடிவுப்படி, 24.10.88 அன்று செல்லூர் மாஸ்டர் வீவர்—தமிழ் நாடு கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சம்மேளத்தின் தலைவர் சோ. கருப்பையா வீட்டு முன்பு மறியல் என அறிவித்து, அதன்படி தொழிலாளர்கள் அணிவகுத்துச் சென்றனர். ஆனால் இடையிலேயே போலீசாரால் கைது செய்யப்பட்டனர். உடனே சவடால் பேர்வழி அய்யாவு;



"நாளைக்கு இப்படி போலீஸ் கைது செய்வதை அனுமதிக்க மாட்டோம். தடையை மீறுவோம்; போராட்ட முறையை மாற்றி விடுவோம்" என்று வீரவசனம் பேசி தொழிலாளர்களை அமைதிப்படுத்தினார்.

அடுத்த நாள் 25.10.88 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் மறியல் என அறிவித்து அதன்படியே ஆட்சித் தலைவர் அலுவலகத்தை நோக்கிச் சென்றது. ஆனால் போலீசு இடைமறித்து கைது செய்ய முயன்றது. தொழிலாளர்களோ கொந்தளித்து, போலீஸ் வேனில் ஏற மறுத்தனர். "போராடும் உரிமையைப் பறிக்காதே! மறியல் செய்யாமல் கைதாக மாட்டோம்.

# கழுதை தேய்ந்து...

'அண்ணன்' உதய மூர்த்தியின் முகவிலாசத்தை ஏற்கனவே தோலுரித்துக் காட்டியிருந்தோம். அதன் தொடர்ச்சியாக, சமீபத்தில் திருப்பத்தூருக்கு வந்த அண்ணனுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை வாசகர்களுடன் இங்கே பகிர்ந்து கொள்கிறார் தோழர் ஆர். செல்வகுமார்.

கடந்த நவம்பர் 13 அன்று திருப்பத்தூர் இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளியில், எம். எஸ். உதய மூர்த்தியின் மக்கள் சக்தி இயக்க அறிமுக விழா நடந்தது. நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த நான், உதய மூர்த்தியைச் சந்தித்து நவம்பர் 1-15 புதிய ஜனநாயகம் இதழில் அவரை அம்பலப்படுத்தி வெளிவந்த கட்டுரைக்கு விளக்கம் கேட்டேன். அவர் அக்கட்டுரையைப் படித்துவிட்டு எந்த ஒரு விளக்கமும் தராமல் மழுப்பி விட்டார். அவருடனிருந்த வட்ஆற்காடு மாவட்ட அமைப்பாளரான அருணாச்சலம் என்பவர், 'இந்தக் கம்யூனிஸ்டுகளே இப்படித்தான்! எல்லாவற்றையும் வரைமுறையின்றி விமர்சனம் செய்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! இந்த விமர்சனம் கூட ஒரு வகையில் எங்கள் வளர்ச்சிக்கு உதவுகிறது' என்று புலம்பினார்.

பின்னர் விழாவில் உதயமூர்த்தி பேசி முடிந்ததும், கேள்வி கேட்பவர்கள் அவற்றை எழுதிக் கொடுங்கள் நான் பதில் சொல்கிறேன் என்றார். நிறையபேர் கேள்விகள் எழுதிக் கொடுத்தனர். நானும், 1. மக்கள் சக்தி இயக்கம் எந்த அரசியலை ஏற்றுக் கொண்டுள்ளது? 2. இடஒதுக்கீடு பற்றி உங்கள் கருத்து என்ன 3. நவம் 1-15 புதிய ஜனநாயகம் இதழில் தங்களைப் பற்றி வெளிவந்த கட்டுரைக்கு உங்கள் விளக்கம் என்ன? ஆகிய கேள்விகளை எழுதிக் கொடுத்தேன்.

"மக்கள் சக்தி இயக்கம் எந்த அரசியலையும் சார்ந்தது அல்ல என்று விளம்பரப் படுத்தியுள்ளோம். இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது? தூங்குபவரை எழுப்பிவிடலாம். ஆனால் தூங்குவதுபோல் நடிப்பவரை எழுபப முடியாது" என்று தனது அரசியலற்ற வாதத்தை மேலோட்டமாக பேசிவிட்டு, எனது அடுத்த இரு கேள்விகளுக்கு விளக்கம் தராமல் அடுத்தவரின் கேள்வியை எடுத்து கொண்டு விளக்க ஆரம்பிததார். கேள்வி கேட்ட எலலோருமே எரிச்சலடைந்து முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். தமிழகத்தின் பொறுக்கி அரசியலைக் கண்டு விரக்தியுற்ற இளைஞர்களை—அறிவு ஜீவிகளை தனது அரசியலற்ற வாதத்தில் இழுத்து காங்கிரசுக்கு வலுச் சேர்க்க 'என்னால் முடியும்' என்று கிளம்பி



படிப்பகம்

போலீஸ்அராஜகம்ஒழிக!'' என்று மறியலில் பங்கேற்கும் தொழிலாளர்களை வழியனுப்ப வந்த தொழிலாளர்கள் தன்னெழுச்சியாக முழக்கமிட்டனர். போலீஸ் தடையை மீறவும் துணிந்துவிட்டனர்.

உடனே இந்தசிஐடியு சங்கத்தின் உள்ளூர் புரோக்கர் குமாரசாமி 'தொழிலாளர்களே, ஒற்றுமை வேண்டும்' என்று அந்தச் சூழ்நிலைக்குப் பொருத்தமில்லாமல் கோஷம் போட்டு தொழிலாளிகளை அமைதிப் படுத்தினார். பின்னர், ''தீய சக்திகள் இப்போராட்டத்தை உடைக்க முற்படுகின்றன. அவர்களை இனங்கண்டு தக்க தண்டனை வழங்குங்கள். எனக்கு கூட அவர்கள் யார் என்று தெரியும். நான் கை நீட்டினால் அவர்கள் எலும்புகூட மிஞ்சாது.'' என்று சவடாலடித்துவிட்டு தீய சக்திகளாக மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் பிற புரட்சிகர அமைப்புகளைக் கூறி விட்டு, முதலாளியையும் போலீசையும் விட்டு விட்டு பிரச்சினையைத் திசை திருப்பி விட்டார்.

இத்துரோகிகளுக்கு தொழிலாளி வர்க்கம் பாடம் புகட்டாமல் விடாது; இதை வருங்கால போராட்ட வரலாறு நிரூபிக்கத்தான் போகிறது.

தகவல்: நந்து
மகஇக, மதுரை.

*



னார் உதயமூர்த்தி. ஆனால், ஐயோ பாவம்! ஏற்கனவே தஞ்சை மாணவர்களிடம் அம்பலப்பட்டது போதாதுஎன்று இப்போது திருப்பத்தூரிலும் மூக்குடைந்து போயுள்ளார். இதே போல, இனி அவர் செல்லுமிடமெல்லாம் 'உரிய வரவேற்பு' நிச்சயம் கிடைக்கும்!




# ரௌடிகளாக போலிகள்!

www.padippakam.com

நியூ இண்டியா லேபர் யூனியன் என்ற தொழிற்சங்கம் சேலம் மாவட்டத்தில் விசைத்தறி தொழிலாளரிடையே கடந்த 9 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. தொழிலாளரின் நலனுக்கும் உரிமைகளுக்கும் போராடி வருகிறது.

இப்பகுதியில் வலது, இடது போலி கம்யூனிஸ்டுகள் தொழிலாளர்களுக்குதொடர்ந்து துரோகமிழைத்து அம்பலப்பட்டு தனிமைப் பட்டுப் போயுள்ளனர். நியூஇண்டியா லேபர் யூனியன் தனது சமரசமற்ற போராட்டத்தால் தொழிலாளர் மத்தியில் செல்வாக்கு பெற்று வளர்ந்து வருகிறது. இதன் வளர்ச்சியை கண்டஞ்சும் பிழைப்புவாத தொழிற்சங்கவாதிகள் இதனை ஒழித்துக்கட்ட அவ்வப்போது அடிதடி ரவுடித்தனங்களில் ஈடுபட்டு பின் வாங்கியுள்ளனர்.

இந்நிலையில் 19. 9. 88 அன்று இளம்பிள்ளையில் உள்ள சங்க தகவல் பலகையில் சட்டபடியான போனஸ் 8.33 சதவீத உட்பட 25 சதவீத போனசை நிர்வாகம் தரவேண்டுமெனக் கோரி எழுதியிருந்தனர். அதோடு ஜெயலலிதாவின் முந்தானை பிடித்துத் திரியும் தா. பாண்டியன் கும்பலுடன் சேர்ந்து சங்க விரோத செயல்களில் ஈடுபட்ட ஜெய்சூரியன் என்பவர் உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்கப்பட்ட செய்தியும் பலகையில் எழுதப்பட்டிருந்தது.

இதைச் சாக்கிட்டு தா. பாண்டியனின் கும்பல் ரவுடித் தனத்தில் இறங்கியது. 20-9-88 இரவு ஜெய்சூரியன், தோட்டாக்காரன், ராஜா என்ற இருவரையும் சேர்த்துக் கொண்டு நள்ளிரவுக்குமேல் சங்கப்பலகையைதிருடி, உடைத்து நாசம் செய்து ஒரு கிணற்றில் போட்டுவிட்டார்.

விசயமறிந்த சங்க உறுப்பினர்கள் மேற்படி ரவுடிகள் மூவரையும் இழுத்து வந்து மக்கள் மத்தியில் விசாரித்தனர். 300க்கும்மேற்பட்ட தொழிலாளிகள், மக்களின் தீர்மானப்படிஅவர்களை அப்படியேஅருகிலுள்ள காகாபாளையம் காவல் நிலையத்தில் ஒப்படைத்து வழக்கும் பதிவு செய்தனர்.

காவல் துறையா? கொக்கா? முதலாளிகளின் விசுவாசத்தொழிற் சங்க தரகர்களை சிறையிலடைக்க அவர்கள் என்ன 'முட்டாள்'களா? நியூ இண்டியா சங்கத்தின் 12 தோழர்களைக் கைது செய்து, 13 பயங்கர குற்றங்கள் செய்ததாக பொய் வழக்கு ஜோடித்து சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

ஆனால் சங்கப்பலகையைத் திருடி ரவுடித்தனம் செய்தவர்கள் மேடை போட்டு 'சட்டம்ஒழுங்கைக்காத்த' போலீசைப் பாராட்டி வெற்றி விழா கொண்டாடி உல்லாச உலா வருகின்றனர்.

ஓட்டுப் பொறுக்கி பதவி சுகம் காண ஜெயலலிதாவின் முன் மண்டியிட்டுத் தவங்கிடங்கும் இந்த தொழிற்சங்க சுல்தான்கள், முதலாளிகள், போலீசார் மூவரும் கூட்டு சேர்ந்து நியூ இண்டியா லேபர் யூனியனை ஒழித்துக்கட்ட செயல்பட்டு வருகின்றனர். சங்கத்தவர்களை சமூக விரோதிகளாகச் சித்தரித்து பிரசுரமும் வெளியிட்டுள்ளது தா. பாண்டியனின் கும்பல்.

அந்தப் பிரசுரத்தில் அவதூறுகளை வாரியிறைத்த அடுத்த வரியில் அவர்களின் உண்மை முகம் பளிச்செனத் தெரிகிறது. ''.. நடுத்தர வர்க்க முதலாளிகளை தொழிலாளர்களுக்கு நிரந்தர எதிரிகளாக அடையாளங் காட்டி போராடும் குறுகிய கண்ணோட்ட நிலையை கொண்டுள்ள இவர்கள்தான் மார்க்சியவாதிகளாம்...?''

நடுத்தர வர்க்க முதலாளிகள் எனக் காரணம் காட்டி அவர்கள் தொழிலாளர் வயிற்றிலடிப்பதையும், அடக்குமுறைகளை ஏவுவதையும் பொறுத்துக் கொள்ளும்படி தொழிலாளிகளுக்கு காந்தீய போதனை புரிந்து, முதலாளிகளின் எச்சல் காசுக்கு நாக்கைத் தொங்கவிட்டு அலையும் இந்த கருங்காலிகள் தாங்கள்தான் உண்மையான மார்க்சிய வாதிகள் என்று வேறு வாய்ச்சவடால் அடிக்கின்றனர்.

ஆனால் இந்த கருங்காலி கும்பலின்துரோகத்தனத்தை விழிப்புணர்வு பெற்ற தொழிலாளிகள் நிச்சயம் முறியடிப்பார்கள்.

தகவல்: எம். சந்திரன்
நியூ இண்டியா லேபர் யூனியன்



படிப்பகம்

www.padippakam.com




கதிர்வீச்சு அபாயத்தைக் கருக்கொண்டு நிற்கும் கல்பாக்கம் அணு உலை

தீராத புற்று நோய்; உடலெங்கும் வெண் குஷ்டம்; கண்பார்வை மங்கும். உடலுறுப்புகள் செயலிழந்து போகும். பிறக்கும் குழந்தைகளுக்கும் இந்நோய் தலைமுறை தலைமுறையாகப் பரவும்.— இந்திய நாட்டு மக்கள் ஏற்கனவே அனுபவித்து வரும் நோய்கள் போதாதென்று பாசிச ராஜீவ் கும்பல் அடுத்தபத்தாண்டுகளில் அளிக்கப் போகும் பரிசுகள் இவை!

அதிர்ச்சியாகவும் குழப்பமாகவும் இருக்கிறதா? வேறொன்றுமில்லை. அணுக்கதிர் வீச்சினால் ஏற்படப் போகும் பேரழிவுகள்தான் இவை.

ஆம்! நாட்டைச் சுடுகாடாக்கும் புதிய கொலைகார திட்டத்துடன் பாசிச ராஜீவ் கும்பல்வெறி பிடித்தலைகிறது. நாட்டை 21ம் நூற்றாண்டுக்கு இழுத்துச் செல்லும் நோக்குடன் 1990க்குள் நாடெங்கும் புதிதாக பத்து அணுமின் நிலையங்களை நிறுவி பத்தாயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப் போவதாக பேராசை பிடித்தலைகிறது.

கோடிக் கணக்கான மக்களின் உறுதியான்போராட்டத்தையும், தேச முழுதுமுள்ள சுற்றுச் சூழல் விஞ்ஞானிகளின் எதிர்ப்பையும் மீறி பின்தங்கிய குக்கிராமங்களில் ரஷிய உதவியுடன் அணுமின் நிலையங்களை நிறுவ பாசிச கும்பல் நாயாய் அலைகிறது. கர்நாடகத்தில் கைகா, கேரளாவில் கொத்தமங்கலம், ஆந்திராவில் நாகர்ஜுனசாகர், தமிழகத்தில் நெல்லை மாவட்டத்திலுள்ள கூடங்குளம் ஆகிய இடங்களில் அணுமின் நிலையங்களை நிறுவுவதற்கானஏற்பாடுகள்ஏற்கனவே துவங்கி விட்டன.

கடந்த இருபதுஆண்டுகளாக தொழில் வளர்ச்சியில் பின் தங்கி விட்ட தமிழகத்துக்கு ராஜீவ் அளித்த பரிசு என்று காங்கிரசு எடுபிடிகள் துதிபாடுகின்றனர். அணுசக்தியின் அருமை பெருமைகளைக் காட்ட மாநாடுகள் கூட்டப்படுகின்றன. காங்கிரசு கவர்னர் அலெக்சாண்டர், அணுசக்தி பற்றிய பீதியை மக்களிடமிருந்து போக்க விஞ்ஞானிகள் முன்வரவேண்டுமென்கிறார்.

ஆனால், பாசிச கும்பல் பகற்கனவு காண்பதுபோல, ஒரு வேளை திட்டமிட்டபடி அணுமின் நிலையங்கள் நிறுவப்பட்டாலும் இத்தனையும் மொத்த மின் தேவையில் 3 அல்லது 5 சதவீதம் தான் ஈடு செய்யும். கடுகளவு மின் உற்பத்தி செய்யும் இத் திட்டத்திற்காக மட்டும் பத்தாயிரம் கோடியை செலவிட பாசிச கும்பல் முடிவு செய்துள்ளது. குறிப்பாக, திருநெல்வேலி—கூடங்குளத்தில் ரஷிய உதவியுடன் நிறுவப்படவுள்ள அணுமின் நிலையத்திற்கு மட்டும் ரூ. இரண்டாயிரம் கோடிக்கு மேல் செலவாகும்.

ரஷிய ஏகாதிபத்தியவாதிகள் ஆதாயமில்லாமலா உதவி செய்வார்கள்? ரஷியாவிலிருந்து அணுமின் உலைக்கு அவசியமான கனநீர் இறக்குமதி செய்யப்படும். அதேசமயம் அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்யப் பயன்படும் புளூட்டோனியம் இந்த அணு உலைகளிலிருந்து வடித்தெடுக்கப்பட்டு ரஷியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும். மின் உற்பத்திக்கு உதவுவது என்ற பெயரில் அணு ஆயுதத் தயாரிப்புக்கான கச்சாப் பொருளை இந்தியாவிலிருந்து

## யார் பயங்கரவாதி?

பஞ்சாபில் பாசிச ராஜீவ்—ரிபைரோ—கில் கும்பல் கட்டவிழ்த்து விட்டுள்ள அரச பயங்கரவாதமும், உளவுப்படை ரா செய்த சதிகளும் பஞ்சாப் பிரச்சினையை மேலும் தீவிரமாக்கி விட்டுள்ளது. அரச பயங்கரவாதிகள் நடத்திவரும் அட்டூழியங்களை வெளியுலகுக்குச் சொல்லும் பத்திரிக்கையாளர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிடப்படுகின்றனர். ஆனால் பஞ்சாப் உயர் போலீசு அதிகாரி ஒருவரே இப்போது அரசு பயங்கரவாதிகளின் சதிகளையும் அட்டூழியங்களையும் அம்பலப்படுத்தி பாசிச கும்பலை விழி பிதுங்க வைத்துள்ளார்.

சமன்லால்—பத்மஸ்ரீ பதக்கம் பெற்ற இன்ஸ்பெக்டர் ஜெனரல். பஞ்சாப் எல்லைப் பகுதியில் பணியாற்றிய உயர் போலீசு அதிகாரி. சமீபத்தில் பத்திரிக்கையாளர்களுக்கு அளித்த பேட்டியில்,



சமன்லால்

"பஞ்சாபில் போலீசார் அப்பாவி மக்களை மிருகத்தனமாக சித்திரவதை செய்து பயங்கரவாதத்தையும் பயபீதியையும் கட்டவிழ்த்து விடுகின்றனர். சீக்கிய தீவிரவாதிகள் 7 ரயில் பயணிகளைக் கொன்றதையடுத்து கிராமப்புறங்களில் அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுமாறு எனக்கு கட்டளையிட்டனர். பஞ்சாப் போலீசு இயக்குனர் கே பி எஸ் கில் இவ்வாறு எனக்குக் கட்டளையிட்டார்.

"ஆனால் நான் அதை ஏற்கவில்லை. உயரதிகாரிகள் சீக்கிய பயங்கரவாதத்தை முறியடிக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மீது எப்போதுமே எனக்கு கருத்து வேறுபாடு உண்டு. இப்போதுநான் உயரதிகாரிகளின் மீது நம்பிக்கை இழந்துவிட்டேன். மக்கள் மீதான ப[illegible]கரவாத அடக்குமுறை எதிர்



படிப்பகம்

www.padippakam.com

ரகசியமாக அள்ளிச் செலவது தான் ரஷிய உதவியின் நோக்கம். இந்தியாவைச் சுடுகாடாக்கும் இந்த அயோக்கியத் தனத்தைத் தான் ஆளும் பாசிச கும்பலும், ரஷிய எடுபிடிகளும் உற்ற நண்பர்களின் உதவியாக உச்சி முகர்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க, ரஷிய உதவியோடு வடிவமைக்கப்படும். இந்த அணு உலைகள் உலகிலேயே பாதுகாப்பற்ற, காலாவதியான, அபாயகரமானவை என்று சர்வதேச விஞ்ஞானிகளும், சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான பசுமை அமைதி இயக்கமும் எச்சரித்துள்ளன. 1981லிருந்து 1985க்குள் உலகெங்கும் நடந்த 48 அணு உலை விபத்துக்கள் அனைத்தும் ரஷிய மாடல் அணு உலைகளிலேயே நடந்துள்ளன. இத்தகைய அபாயகரமான, ரஷிய மாடல் அணு உலைகள்தான் இந்தியாவெங்கும் நிறுவப்படவுள்ளன.

"ஈராண்டுகளுக்கு முன்பு ரஷியாவில் செர்னோபில் அணு உலையில் ஏற்பட்ட கோரமான விபத்துக்குப்பிறகு , கதிரியக்கத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக மட்டும் ரூ. 1750கோடிசெலவிடப்பட்பது. ஆனால் அந்தஅளவுக்கு செலவிட இந்தியாவுக்குவாய்ப்பே இல்லை. அமெரிக்காவில்கூட கடந்த எட்டுமாதங்களில் மூன்று அணுமின் நிலையங்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டுக் கொண்டிருக்கும்போது, இந்தியா புதிதாக அணு உலைகளைக் கட்டியமைப்பது மக்கள் விரோதமானது" என்று பல விஞ்ஞானிகள் பகிரங்கமாக சாடி வருகின்றனர்.

இந்த லட்சணத்தில் இந்தியாவிலுள்ள அனைத்து அணு உலைகளும் கோடிக் கணக்கான ரூபாய்களை விழுங்கிவிட்டு, விஞ்ஞான ரீதியில் படு தோல்வியடைந்து, பேரழிவைக் கருக்கொண்டு நிற்கின்றன. சென்னை — கல்பாக்கம் அணுமின் நிலையம், கல்பாக்கம் நகருக்கேகூட முறையாக மின்சாரம் கொடுக்கமுடியாத நிலையில் "தவிர்க்க வியலாத" காரணங்களால் அடிக்கடி மூடிப்படுகிறது. தவிர்க்கவியலாத காரணம் என்பது கனநீர் கசிவு ஏற்பட்டு கதிரியக்கம் பரவும் அபாயம்தான்! இத்தனையும் போதாதென்று கோடிக்கணக்கில் நமது வரிப்பணத்தைக் கொட்டி இப்போது ரஷிய உதவியுடன் அணுஉலைகளை நிறுவி, தெற்காசியாவில் வல்லமைமிக்க நாடாகி, அண்டை நாடுகளை அச்சுறுத்தத் துடிக்கிறது ஆளும் பாசிச கும்பல்.

ஏற்கனவே, நள்ளிரவில் உறக்கத்திலிருந்த பத்தாயிரக் கணக்கான உழைப்பாளி மக்களைப் படுகொலை செய்து, லட்சக்கணக்கான மக்களை சிறுகச் சிறுக செத்து மடிய வைக்கும் போபால் சதியினை, அமெரிக்க ஏகாதிபத்தியம் இங்குதான் அரங்கேற்றியது. ஒரே நாளில் பத்தாயிரம் பேரை அமெரிக்கா கொன்றது என்றால், தலைமுறை தலைமுறையாக இந்திய மக்களைக் கொல்லுவதுதான் ரஷிய ஏகாதிபத்தியத்தின் 'சோசலிச'த் திட்டம். அதன்படியே இன்று ரஷியா உதவி, நட்பு என்ற மூடுதிரையின் பின்னே, தனது அணு ஆயுதத் தயாரிப்புக்கான பின்னிலமாக இந்தியாவை மாற்ற முடிவு செய்து விட்டது. இதுதான் போலிக் கம்யூனிஸ்டுகள் புகழ்பாடும் ரசிய உதவியின் லட்சணம்!

○ குமார்

விளைவுகளை ஏற்படுத்தும். கையளவேயான பயங்கரவாதிகளைத் தவிர, மக்களனைவரையும் மரியாதையாக நடத்தவேண்டும் என்ற எனது கோரிக்கையை உயரதிகாரிகள் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ராஜீவ் அரசின் 'மதச்சார்பின்மையின் மீதேஎனக்கு பெருத்த சந்தேகம் எழுகிறது" என்று அரச பயங்கரவாதிகளின் அட்டூழியங்களை அங்குலம்அங்குலமாகத் தோலுரித்துக் காட்டியுள்ளார்.

அதே சமயம் சமன்லால், சந்தேகப்படுபவரை போலீசார் சித்திரவதை செய்வதை நிறுத்துதல், எவரையும் கைது செயயும்போது கிராம பஞ்சாயத்தில் முறையாக அறிவிப்பு செய்தல், போலீசார் கிராம மக்களை அச்சுறுத்தி லஞ்சம் வாங்குவதை தடுப்[illegible] முதலான நடவடிக்கைகளை [illegible] தார். "சமன்லாலின் மனிதாபிமான நடவடிக்கையால் எல்லைப் பகுதியில் நிலைமை வெகுவாக மாறிவிட்டது. அவர் மக்களிடம் மிகவும் செல்வாக்கு பெற்றுள்ளார். தேர்தலில் நின்றால் அமிர்தசரசில் எல்லா போட்டி வேட்பாளர்களையும் தோற்கடித்து விடுவார்" என்று போலீசு அதிகாரிகளும் சிவில் அதிகாரிகளும் வெளிப்படையாக ஒப்புக் கொள்கின்றனர்.

இத்தனைக்கும் பிறகும் பாசிச கும்பல் சும்மாயிருக்குமா? சமன்லாலை பஞ்சாபிலிருந்து தூக்கி டெல்லிக்கு மாற்றல் செய்து விட்டது. சீக்கிய தீவிரவாதத்தை ஒழிக்க முட்டாள்தனமாக அரச பயங்கரவாதம் என்ற பாறாங்கல்லை தூக்கி வீச முயன்றது பாசிச கும்பல். இப்போது தன் கால் மீதே போட்டுக் கொண்டு அலறுகிறது.

# போலிகளின் தகிடுத்தத்தங்கள்

அண்மையில் ரஷிய அதிபர் கோர்ப்பசேவ் இந்தியாவுக்கு வருகை தந்து 'சலுகை விலையில்' கூடங்குளம் அணுமின் திட்டத்தை நிறுவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதை ரஷிய எடுபிடிகளான போலிக் கம்யூனிஸ்டுகள் விசுவாசத்தோடு வரவேற்றுள்ளனர். அதோடு இக்கொலைகார திட்டத்தை எதிர்ப்பவர்கள், "அமெரிக்காவுக்குப் போட்டியாக இந்தியா வளர்ந்து விடக்கூடாது என்ற உள்நோக்கத்துடன்" எதிர்ப்பதாக சாடியுள்ளனர்.

மக்கள் நலனில் கிஞ்சித்தும் அக்கறையின்றி ரஷிய ஏகாதிபத்தியத்துக்கும் பாசிச ராஜீவ் கும்பலுக்கும் வெண்சாமரம் வீசும் துரோகிகளாக போலிக் கம்யூனிஸ்டு தலைமை அம்பலப்பட்டுள்ள நிலையில், இக்கட்சிகளின் அணிகளில் பலர் தலைமையின் துரோகத்திற்கு எதிராக 'கலகம்' செய்யவும் துவங்கியுள்ளனர். கூடங்குளம் வட்டார 'மார்க்சிஸ்ட்' கட்சி செயலாளர், 'என் உயிருள்ளவரை இத்திட்டத்தை எதிர்ப்பேன்' என்று பேட்டியளிக்கிறார். அணிகளில் பலர் இத்திட்டத்தை எதிர்க்கும் அமைப்புகளுடன் சேர்ந்து பிரச்சாரம் செய்கின்றனர்.

இந்நிலையில், கூடங்குளம் அணுமின் திட்டத்தை எதிர்க்க கிளம்பியுள்ள புதிய போலிகளான இந்திய மக்கள் முன்னணியினர் ரஷியாவை மென்மையாக கண்டிக்கக் கோருகின்றனர். ஏனெனில் அது 'சோசலிச' நாடாம்! எனவேதான், "தோழர் கோர்ப்பசேவ்! ரஷிய மக்களுக்கு ஆபத்து விளைவித்த அணு உலையை இந்திய மக்கள் மேல் திணிப்பது ஏன்? ராஜீவே! கல்பாக்கத்தை மூடு, கூடங்குளத்தை திறக்காதே!" என்று சென்னை நகரில் சுவரொட்டி பிரச்சாரம் செய்துள்ளனர். கொலைகாரர்களில் கூட முற்போக்கு-பிற்போக்கைப் பிரித்துப் பார்ப்பதுதான் இ.ம.மு. பிராண்டு போராட்டமுறை! இதே பாணியில்தான் 'தேன்மழை' என்ற பத்திரிக்கை நடத்தும் அய்கஃப் (AICUF) என்ற கிறித்துவ தன்னார்வக் குழுவின் மாணவர் இயக்கமும் மதுரையில் சுவரொட்டிப் பிரச்சாரம் செய்து வருகின்றன. கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கு எதிராகப்போராடும் உழைக்கும் மக்களும் அமைப்புகளும் விழிப்புடனிருந்து இத்தகைய போலிகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்த வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

கடந்த நவம்பர் மாத மத்தியில், ராஜீவ் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்தபோது நடத்திய அரசியல் வாண் வேடிக்கைகளில் இதுவும் இன்று! வழக்கமான புன்சிரிப்பு, கையசைப்பு, வேட்டி துண்டு வீசுவது, குடிசைக்குள் நுழைந்து குசலம் விசாரிப்பது என்பதோடு இந்த முறை இன்னும் பல கோமாளிக் கூத்துக்களை நிகழ்த்திக் காட்டி மக்களை கவர்ந்திழுக்க முயற்சித்தார், ராஜீவ்.

பெண் தொழிலாளர்கள், குழந்தை உழைப்பாளிகள் அதிகமாக பீடிசுற்றும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வேலூர்—விருதாம்பட்டிக்கு சென்று, அத்தொழிலாளர் பீடி சுற்றும் தொழில் ரகசியத்தை ஆவலோடு கேட்டறிந்தார். அத்தொழிலாளர்களுடன் சிறு கூட்டம் நடத்தி அவர்களின் குறைகளைப் போக்க தாம் ஆவண செய்வதாக உறுதி கொடுத்தார். பீடி சுற்றும் பெண் தொழிலாளர்களின் உழைப்பின் கடுமையை தாம் உணர்ந்திருப்பதாகவும்(!) தம்முடைய அரசாங்கமும் இதே போன்று பல்வேறு தொழில் புரியும் பெண் உழைப்பாளர்களின் நிலையை ஆராய்ந்து வருவதாகவும், உடனே இதற்கு தாம் உதவப் போவதாகவும் துயரம் தோய்ந்த முகத்துடன் பேசி முடித்தார்.

பெண்கள் இருள் சூழ்ந்த சூழ்நிலையில் சிக்கிக் கொண்டிருப்பதற்கு காரணமே கழகங்களின் ஆட்சிதான்; குறிப்பாக திமுக ஆட்சிதான் இதற்கு பொறுப்பு என்றார். இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு காங்கிரசுக் கட்சியின் ஒளிமயமான ஆட்சியை மக்கள் மீண்டும் மலர வைப்பார்கள் என தாம் நம்புவதாக நாக்கில் எச்சில் ஊற கூறினார்!

இதோ, இவர்கள், காங்கிரசு ஆளும் பீகார் மாநிலத்தின் தன்பாத் நிலக்கரிச் சுரங்கத்தின் பெண் உழைப்பாளிகள். இப்போது இவர்கள் வேலையிலிருந்து துரத்தியடிக்கப்பட்டு விட்டார்கள்! காரணம், 45 வயதுக்கு மேற்பட்ட பெண் உழைப்பாளிகள் பாரம் தூக்குவதில் சோம்பேறிகளாகி விடுகிறார்கள் என்கிறது அரசு நிர்வாகம். இவர்களைப்போல் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பெண் உழைப்பாளிகள் இப்போது வேலையிலிருந்து விரட்டப்பட்டு விட்டார்கள் தானே விரும்பி வேலையிலிருந்து விலகுவது என்ற திட்டத்தின் கீழ் பொய்யான வேலை விலகல் கடிதங்களை நிர்வாகமே தயாரித்து, முன்னறிவிப்புக் கொடுக்காமலேயே இவர்களை வேலையிலிருந்து வெளியேற்றியிருக்கிறது.

இவர்களின் வாரிசுகளுக்கு வேலை கொடுத்திருப்பதாகக் கணக்கு எழுதி, காங்கிரசு மந்திரிகளுக்கு தெரிந்த ஆட்களை ஆயிரக்கணக்கில் உள்ளே நுழைத்திருக்கிறது, நிர்வாகம். அம்மாநிலத்தின் முன்னாள் காங்கிரசு முதன் மந்திரி பிந்தேஷ்வர்துபேவின் ஆட்களும், அவருக்கு மிகவும் நெருக்கமான, எஸ் கே. ராய் என்ற காங்கிரசு தொழிற்சங்க தலைவனின் ஆட்களும் இவ்வாறு ஏராளமாக வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

பெண்களுக்கு சமவேலைக்கு சம ஊதியம், கல்வியறிவு, வேலையில் 30 சதவீத ஒதுக்கீடு என பெண்கள் முன்னேற்றம் பற்றி தீர்மானம் இயற்றி தேர்தல் வாக்குறுதி கொடுக்கும் பாசிச ராஜீவ் கும்பலும் அதன் அடிவருடிக் கூட்டமும்தான் பெண்களின் உரிமையை காலில் போட்டு மிதிப்பதில் முன்னணி வகிக்கிறது. இக்கும்பலுக்கு எதிரான தேசிய மாற்றாக வலம் வரும் ஓட்டுப் பொறுக்கிகள் தங்கள் ஆட்சிக்காலத்திலும் இதே முறையில்தான் ஆட்டம் போட்டனர், போடுகின்றனர்.

தாய்குலம் பற்றி வாய்கிழிய பேசி, அவர்களின் வாழ்வையே வேட்டையாடும் ஓட்டுப் பொறுக்கிகளின் கூட்டத்துக்கு நாம் வேட்டு [illegible]ப்பது எப்போது?



படிப்பகம்